தினமலர்

## "இறால் பண்ணை பதிவு அவசியம்'

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 06,2012,05:09 IST

திருவள்ளூர்:மாவட்டத்தில் உள்ள, இறால் பண்ணைகளை முறையாக புதுப்பிக்க வேண்டும் என, கலெக்டர் உத்தரவிட்டு உள்ளார்.கலெக்டர் ஆஷிஷ் சட்டர்ஜி அறிக்கை: கடலோர உவர் நீர் இறால் பண்ணைகளை கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தில் பதிவு செய்ய வேண்டும். மாவட்டத்தில் புதிய இறால் பண்ணைகள் துவங்குவோர், பொன்னேரி நீர்வாழ் உயிரின வளர்ப்பு அலுவலகத்தில் முறையாக விண்ணப்பிக்க வேண்டும்.பதிவு செய்யப்பட்ட பண்ணைகளுக்கு மானிய நிதி உதவி வழங்கப்படும். ஏற்கனவே உரிமம் பெற்று உள்ளோர், ஐந்து ஆண்டுகளில் உரிமம் காலாவதி ஆவதால் அதனை புதுப்பிக்க வேண்டும். உரிமம் பெறாத மற்றும் புதுப்பிக்காத இறால் பண்ணைகள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும். இறால் பண்ணைகளை புதுப்பிக்க அணுக வேண்டிய தொலைபேசி எண்:044-2797 1262.இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## வேளாண் கருத்தரங்கில் பெருமிதம் தமிழக பொருளாதார வளர்ச்சியில் தோட்டக்கலை பயிர்களின் பங்கு

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 06,2012,06:13 IST

சேலம்: "தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியில், தோட்டக்கலை பயிர்களின் பங்கு, 3.5 சதவீதமாக உயர்ந்துள்ளது' என்று, சேலத்தில் நடந்த வேளாண் கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது. சேலம், வேளாண்மை இணை இயக்குனர் அலுவலக கூட்ட அரங்கில், 11வது ஐந்தாண்டு திட்டத்தில், தோட்டக்கலை மற்றும் வேளாண் பயிர்களின் உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சி குறித்த கருத்தரங்கம் நடந்தது. சேலம், வேளாண் இணை இயக்குனர் செங்கோட்டுவேல் தலைமை வகித்தார். கோவை வேளாண் பல்கலை பொருளாதாரத்துறை பேராசிரியர் பரமசிவம் வரவேற்றார். கோவை வேளாண் பல்கலை வேளாண் பொருளாதாரத்துறை தலைவர் சின்னதுரை பேசியதாவது: தமிழகத்தில், 2010-11ம் ஆண்டில், தோட்டக்கலை பயிர்கள், 10.76 லட்சம் ஹெக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டு, 188 லட்சம் மெட்ரிக் டன் விளை பொருட்கள் உற்பத்தி

செய்யப்பட்டுள்ளது. 11வது, ஐந்தாண்டு காலத்தில், தமிழகத்தின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியில், தோட்டக்கலை பயிர்களின் பங்கு, 3.5 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது, ஒட்டுமொத்த வேளாண்மை துறையின் வளர்ச்சியில், 23 சதவீதமாகும். தமிழகத்தில் நிலவும், ஏழு விதமான தட்பவெப்ப சூழ்நிலையை நன்கு பயன்படுத்தி, அதற்கேற்ப தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்ய வேண்டும். பொருளாதார ரீதியாக, அதிக லாபம் தரக்கூடிய தோட்டக்கலை பயிர்களை விவசாயிகளிடம் ஊக்குவிக்க வேண்டும். ஏற்றுமதி வாய்ப்புள்ள பயிர்களுக்கு முக்கியத்துவம் தர வேண்டும். இயற்கை பண்ணை சாகுபடி முறையை ஊக்குவிக்க வேண்டும். தரமான நடவு செடிகளின் விதைகள், விவசாயிகளுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும்.

தோட்டக்கலை பயிர் சாகுபடியில், பணியாட்கள் பற்றாக்குறையை சமாளிக்க, நவீன இயந்திரங்களை பயன்படுத்த வேண்டும். துல்லிய பண்ணைய தொழில்நுட்பத்தை, மேலும் பரவலாக்க வேண்டும். பெருமளவு விளைபொருட்கள் வீணாவதை தடுக்க, அறுவடைக்கு பின், கையாள வேண்டிய தொழில் நுட்பம் குறித்து பயிற்சி அளிக்க வேண்டும். இதன் மூலம், 12வது ஐந்தாண்டு திட்ட காலத்தில், அதிகளவு வருவாயை விவசாயிகள் பெற முடியும். இவ்வாறு அவர் பேசினார். சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மற்றும் நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த வேளாண்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்ந்த அலுவலர்கள், முன்னோடி விவசாயிகள் மற்றும் வேளாண் பல்கலை வல்லுனர்கள் கலந்து கொண்டனர்.

**கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி: கலெக்டர்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 06,2012,06:13 IST

சேலம்: "சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும், கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்படவுள்ளது' என்று கலெக்டர் மகரபூஷணம் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும், கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பால் உற்பத்தியில் பெரும் பங்கு வகிக்கும், கலப்பின மாடுகளை கோமாரி நோய் தாக்குவதால், பால் உற்பத்தி மற்றும் பொருளாதார இழப்பு ஏற்படுகிறது. கால்நடை பராமரிப்பு துறை மற்றும் ஆவின் மூலமாக, கோமாரி நோய் தடுப்பூசி போடப்படவுள்ளது. பசு, எருமைகளுக்கு அதிக காய்ச்சல், வாயிலிருந்து உமிழ்நீர் வழிதல், நாக்கில், உதட்டோரோம் புண், கால் குளம்புகளில் புண் போன்ற அறிகுறி இருந்தால், அந்த கால்நடைகளிடம், அதன் குட்டிகளை பால் குடிக்க அனுமதிக்கக் கூடாது. இந்த நோய் தாக்கப்பட்ட கால்நடைகளுக்கு, பொட்டாசியம் பர்மாங்கனேட் பவுடர் ஒரு துளியை, இரண்டு லிட்டர் தண்ணீரில் கலந்து, நாக்கு, உதட்டோரம், கால் குளம்புகளில் உள்ள புண்கள் மீது தடவலாம். கிளிசரின் மருந்தை நாக்குப் புண்களுக்கு தடவலாம். கால் குளம்புகளில் உள்ள புண்களுக்கு வேப்பெண்ணெய் தடவினால்,

ஈக்கள் மொய்க்காமல் புண்கள் விரைவில் குணமாகும். சந்தைகளில் வாங்கி வரும் கால்நடைகளை, மூன்று வாரங்களுக்கு மற்ற கால்நடைகளுடன் சேர்க்காமல் தனி இடத்தில் வைத்து, அதன்பின், மற்ற கால்நடைகளுடன் சேர்த்து வளக்கலாம். கோமாரி நோய் தாக்கப்பட்ட கால்நடைகளை தனியாக பிரித்து, உரிய சிகிச்சை அளிக்க வேண்டும். அதை இறைச்சிக்காக விற்பனை செய்ய கூடாது. நோய் பாதிக்கப்பட்டு இறந்த கால்நடையை, ஆழமான குழி தோண்டி சுற்றிலும் சுண்ணாம்பிட்டு புதைக்க வேண்டும். காந்டைகளில் கோமாரி நோய் அறிகுறி தென்பட்டால், அருகில் உள்ள கால்நடை நிலையத்துக்கு தெரிவிக்க வேண்டும். கலப்பின மாடுகள், கறவை எருமை, உழவு மாடுகளுக்கு, ஆறு மாதங்களுக்கு, ஒருமுறை கோமாரி நோய் தடுப்பூசி போட வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கலப்பு உரத்தில் கலப்படம் விவசாயிகள் அதிர்ச்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 06,2012,06:49 IST

நங்கவள்ளி: நங்கவள்ளி, ஜலகண்டபுரம் பகுதியில், விற்பனை செய்யப்படும் கலப்பு உரத்தில், 40 சதவீதம் கல் துகள்களை கலந்து, விற்பனை செய்வதாக, விவசாயிகள் தரப்பில் புகார் எழுந்துள்ளது.

நங்கவள்ளி, ஜலகண்டபுரம், தாரமங்கலம் சுற்றுப்பகுதியில், 30க்கும் மேற்பட்ட தனியார் உரக்கடைகள் உள்ளது. நடப்பாண்டில், இப்பகுதி விவசாயிகள், வேர்க்கடலை, பருத்தி, உளுந்து சாகுபடியை துவங்கியுள்ளனர். விதைப்புக்கு முன், நிலத்தில் டி.ஏ.பி., யூரியா, பொட்டாஷ் மூன்றும் கலந்த கலப்பு உரம் இடப்படும்.நங்கவள்ளி பகுதி விவசாயிகள் சிலர், உரக்கடைகளில் விற்பனை செய்யப்படும் கலப்பு உரத்தை வாங்கி, நிலத்தில் போட்ட போது, பொட்டாஷ் உரம் மட்டும் கரையாமல் இருந்தது. சந்தேகம் அடைந்த விவசாயிகள், கலப்பு உரத்தை நீரில் போட்டு சோதனை செய்தனர்.

அப்போது, பொட்டாஷ் உரத்தில், வெள்ளை நிற கல்துகள்கள் கலப்படம் செய்திருப்பது தெரியவந்தது. 100 கிராம் உரத்தை நீரில் கரைத்த போது, 40 கிராம் கல் துகள்கள், அடியில் தேங்கியதால், விவசாயிகள் அதிர்ச்சியடைந்தனர். வேளாண்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், ""வெளிமார்க்கெட்டில், டி.ஏ.பி., யூரியா, பொட்டாஷ் ஆகிய உரங்கள் தனித்தனியாக விற்பனைக்கு வருகிறது. இதில், பெரும்பாலும் கலப்படம் இருப்பதில்லை. இந்த உரங்கள், மூன்றையும் கலந்து வியாபாரிகள் கலப்பு உரமாக விற்பனை செய்கின்றனர். அப்போது, சில வியாபாரிகள், கல் துகள்களை கலப்படம் செய்யக் கூடும். உரம் வாங்கும் விவசாயிகள் எச்சரிக்கையோடு இருப்பது அவசியம்,'' என்றார்.

**சமூக ஆர்வலர்கள் குற்றச்சாட்டு சொட்டுநீர் பாசன முறைகேடு மறைக்க ஆவணங்கள் திருத்தம்?**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 06,2012,05:59 IST

நாமக்கல்: சொட்டு நீர் பாசன திடத்துக்கு, மானியம் வழங்கியதில் நடந்த முறைகேடுகளை மூடி மறைக்க, ஒரு சில அதிகாரிகள், ஆவணங்களை திருத்த முயற்சிப்பதாக, சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

நாமக்கல் மாவட்டத்தில், 2007 முதல், 2011 வரை, சொட்டுநீர் பாசனம் அமைக்க மானியமாக, 20.58 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. அதில், பல்வேறு முறைகேடு நடந்துள்ளதாக புகார் எழுந்தது. அதையடுத்து, சென்னை தோட்டக்கலைத்துறை கூடுதல் இயக்குனர் முத்துசாமி தலைமையில், ஆறு பேர் கொண்ட குழுவினர், மாவட்டத்தில் முகாமிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.நாமக்கல் மாவட்ட கலெக்டர் குமரகுருபரன் உத்தரவின் பேரில், வேளாண் துறை அதிகாரிகள் அடங்கிய, ஏழு குழுவினரும் தனித்தனியாக ஆய்வு செய்தனர். விசாரணையில், சில யூனியன்களில், சொட்டுநீர் பாசனக் கருவி பெற்ற பட்டியலில், பல்வேறு முறைகேடு நடந்திருப்பது தெரிய வந்தது.எலச்சிபாளையம், மல்லசமுத்திரம் யூனியனில், அதிகளவு முறைகேடு நடந்திருப்பதாக, அதிகாரிகள் நடத்திய விசாரணையில் தெரிய வந்தது. முறைகேடு தொடர்பாக, தீவிர விசாரணை நடத்தவும் மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில், சம்பந்தப்பட்ட துறை அதிகாரியும், சேலத்தில் பணியாற்றும் அலுவலர் ஒருவரும் சேர்ந்து, மல்லசமுத்திரம் வட்டாரத்தில் நடந்துள்ள முறைகேடுகளை மூடி மறைக்கும் வகையில், மாவட்ட அலுவலகத்தில் உள்ள ஆவணங்களை திருத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர், சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.இது குறித்து கலெக்டர் குமரகுருபரனிடம் கேட்ட போது, ""இரண்டு வாரமாக சொட்டுநீர் பாசனம் தொடர்பான ஆவணங்கள், கலெக்டர் முகாம் அலுவலகத்தில் பாதுகாப்பாக உள்ளது. அதனால், அதில், திருத்தம் செய்வதற்கு வழியில்லை. முறைகேடு தொடர்பாக, அதிகாரிகள் அறிக்கையும் பெறப்பட்டுள்ளது. அந்த அறிக்கை நாளை, அரசுக்கு அனுப்பி வைக்கப்படும். புதிதாக பொறுப்பேற்கும் கலெக்டர் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பார்," என்றார்.

**செப்.,11ல் மண்புழு உரம் தயாரிப்பு பயிற்சி முகாம்**
பதிவு செய்த நாள் : செப்டம்பர் 06,2012,06:05 IST

நாமக்கல்: "நாமக்கல் வேளாண் அறிவில் நிலையத்தில், வரும், 11ம் தேதி, மண்புழு உரம் தயாரிக்கும் முறை குறித்து, ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்க உள்ளது' என, ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 11ம் தேதி, மண்புழு உரம் தயாரிக்கும் தொழில்நுட்பம் எனும் தலைப்பில், ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்க உள்ளது. பயிற்சியில், மண்புழு உரம் தேர்வு செய்தல், தொட்டி முறை, குவியல் முறை மண்புழு உரம் தயார் செய்தல், கோழிக் கழிவில் இருந்து மண்புழு உரம் தயார் செய்தல் ஆகியவை குறித்து பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

பயிற்சியில், விவசாயிகள் உட்பட அனைத்து தரப்பினரும் பங்கேற்கலாம். பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர், வரும், 10ம் தேதிக்குள், நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரிலோ அல்லது, 04286-266345, 266244 என்ற எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்.

**கொல்லிமலையில் 2,000 டன் மிளகு உற்பத்தி**
பதிவு செய்த நாள் : செப்டம்பர் 06,2012,06:00 IST

நாமக்கல்: ""கொல்லிமலையில், 650 ஹெக்டேர் பரப்பளவில், 2,000 டன் மிளகு உற்பத்தி செய்யப்படுகிறது," என, மாவட்ட கலெக்டர் குமரகுருபரன் பேசினார். நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை யூனியன் அலுவலகத்தில், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில், மிளகு அறுவடைக்கு பின் தொழில்நுட்பங்கள் மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்த கலந்துரையாடல் நடந்தது. மாவட்ட கலெக்டர் குமரகுருபரன்

தலைமை வகித்து பேசியதாவது: கொல்லிமலையில், 650 ஹெக்டேர் பரப்பளவில் மிளகு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம், 2,000 டன் மிளகு உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு தரமான மிளகு உற்பத்தி செய்த போதும், விவசாயிகளுக்கு போதிய விழிப்புணர்வு இல்லாததால், மிளகை குறைந்த விலைக்கு விற்பனை செய்யும் நிலை உள்ளது.
வெளி மாநிலங்களிலிருந்து வரும் வியாபாரிகள், மிளகு கொள்முதல் செய்ய இடம் ஏற்பாடு செய்யப்பட உள்ளது. அங்கு மிளகை விற்பனைக்காக கொண்டுவரும் சாகுபடியாளர்கள், மிளகை உற்பத்தி செய்ததற்கான செலவு, லாபம் ஆகியவற்றை கணக்கிட்டு அதற்கேற்றாற்போல், விலை நிர்ணயம் செய்ய வேண்டும். அறுவடை சீஸனில், மிளகு பறிப்பதற்காக அலுமினிய ஏணி, தண்டிலிருந்து மிளகை பிரிப்பதற்கான இயந்திரம், காய வைப்பத்தற்கான களம், சோலார் டிரையர் போன்றவை வாங்க திட்ட மதிப்பீடுகள் தயாரித்து, அரசுக்கு அனுப்பப்படும். இவ்வாறு அவர் பேசினார் யூனியன் சேர்மன் சந்திரசேகரன் முன்னிலை வகித்தார். துணை இயக்குனர் விஸ்வநாதன், உதவி இயக்குனர் சௌந்திரராஜன், பி.டி.ஓ.,க்கள் ரவி, சிங்கராயன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## வாழை இலை விலை அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 06,2012,07:19 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் தொடர்ந்து பொய்த்து வரும் மழை காரணமாக வாழை பழம் மற்றும் வாழை இலையின் விலை பல மடங்கு அதிகரித்துள்ளது.
விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில், நெல், கரும்புக்கு அடுத்தபடியாக வாழை அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தியாகும் வாழை பழங்கள் வெளி மாவட்டங்களுக்கு வியாபாரிகள் மொத்தமாக கொள்முதல் செய்கின்றனர். வாழை சாகுபடி அதிகம் என்பதால், தர்மபுரி மாவட்டத்தில் வாழை இலை, வாழைப்பூ, தண்டு உள்ளிட்டவைகள் விற்பனையும் உள்ளூர் சந்தைகளில் அதிகம் நடப்பதுண்டு, வாழை இலைகள் வெளி மாவட்டங்களுக்கும் இங்கிருந்து அனுப்பி வைக்கப்படுகிறது. தற்போது, தென்மேற்கு பருவமழை பொய்த்து போனதால், மாவட்டத்தில் வாழை உற்பத்தியில் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது. இறைவை பாசன பகுதியில் சாகுபடி செய்யப்படும் வாழையின் பரப்பு கடந்தாண்டை விட இந்தாண்டு குறைந்துள்ளது.
வாழை சாகுபடி பாதிப்பு காரணமாக உள்ளூர் சந்தைக்கு வரும் வாழைப்பழம், வாழை இலை உள்ளிட்டவைகள் வரவு குறைந்து விலை ஏற்றம் ஏற்பட்டுள்ளது. வாழை பழங்கள் விலை பல மடங்கு உயர்ந்துள்ளது போல், வாழை இலையின் விலையும் உயர்ந்துள்ளது. கடந்த காலங்களில் ஒரு ரூபாய்க்கு ஒரு இலை விற்பனை செய்யப்பட்டது. கடந்த ஒரு வாரமாக ஒரு இலை மூன்று ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது. முகூர்த்த நாட்களில் விலை இன்னும் அதிகரித்து

வருகிறது. விஷேச வீடுகளில் வாழை இலை பயன்பாடு இருப்பதால், விலை ஏற்றம் இருந்தாலும் சந்தையில் விற்பனை குறைவில்லாமல் உள்ளது. சிறிய ஹோட்டல்கள் உள்ளிட்ட உணவகங்களில் இலைக்கு பதில் பிளேட் பயன்படுத்துவது அதிகரித்து வருகிறது. சாலையோர அந்தி கடைகளில் இலைக்கு பதில் பிளாஸ்டிக் பேப்பர்கள் பார்சலுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதே விலை ஏற்றம் இன்னும் சில மாதங்களுக்கு இருக்கும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

**நெல் அறுவடை தொழிலாளர் கூலி கடும் உயர்வு! அறுவடை இயந்திரங்களுக்கும் தட்டுப்பாடு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 06,2012,05:56 IST

கோபிசெட்டிபாளையம்: தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் நெல் அறுவடை கூலி, மற்ற பகுதியில் உள்ள அரசு நெல் அறுவடை இயந்திரங்களைக் கொண்டு வர வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கோபி வட்டாரத்தில் பங்களாபுதூர், காசிபாளையம், பாரியூர், கரட்டடிபாளையம், கூகலூர், கள்ளிப்பட்டி, புஞ்சை துறையம்பாளையம், டி.என்.பாளையம், அரக்கன்கோட்டை, அக்கரைகொடிவேரி உள்ளிட்ட பகுதியில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன வசதி பெறுகிறது. இப்பகுதியில், 15 ஆயிரம் ஏக்கரில் நெல் நடவு செய்யப்பட்டுள்ளது.தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு உட்பட்ட பகுதியில் நெல் அறுவடை பணி தீவிரமாக நடக்கிறது. தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில் உள்ள நெல் அறுவடை இயந்திரங்கள் நெல் அறுவடை பணிக்கு பயன்படுத்தப்படுகிறது. ஈரோடு மாவட்டத்தில் கோபி, ஈரோடு ஆகிய இரண்டு இடங்களில் மட்டுமே நெல் அறுவடை இயந்திரங்கள் உள்ளன.

தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில், 15 ஆயிரம் முதல், 18 ஆயிரம் ஏக்கர் வரை நெல் பயிரிடப்பட்டுள்ளது. நெல் அறுவடைப் பணி தீவிரமடைந்துள்ள நிலையில் இரண்டு நெல் அறுவடை இயந்திரங்கள் போதுமானதாக இல்லை. தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில், முதலில் பதிவு செய்துள்ள விவசாயிகள், சிபாரிசு அடிப்படையிலான விவசாயிகளுக்கு நெல் அறுவடை இயந்திரங்கள் முதலில் வழங்கப்படுகிறது. பெரும்பாலான விவசாயிகள், தனியார் நெல் இயந்திரங்களை நம்ப வேண்டி உள்ளது. தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் உள்ள நெல் அறுவடை இயந்திரத்துக்கு மணிக்கு, 825 ரூபாய் மட்டுமே வசூலிக்கப்படுகிறது. கூலியாட்கள் மூலம் நெல் அறுவடை செய்தால், மணிக்கு, 1,400 முதல் 1,700 ரூபாய் வரை வசூலிக்கப்படுகிறது. தமிழகத்தில் வேறு எந்த பகுதியில் நெல் அறுவடை பணி நடக்காததால், மற்ற மாவட்டங்களில் உள்ள அரசு நெல் அறுவடை இயந்திரங்களைக் கொண்டு வர வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தில் இரண்டு நெல் அறுவடை இயந்திரங்கள் மட்டுமே உள்ளன. கரூர்,

நாமக்கல், திருப்பூர் உள்ளிட்ட பகுதியில் அரசு நெல் அறுவடை இயந்திரங்கள் தற்போது வேலையின்றி உள்ளன. தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் அறுவடை பணி தீவிரமடைந்துள்ளதால், அப்பகுதியில் உள்ள நெல் அறுவடை இயந்திரங்களை இங்கு கொண்டு வந்தால் விவசாயிகள் பயனடைவர். அரசு பரிசீலனை செய்து இயந்திரங்களை கொண்டு வர வேண்டும் என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**பொங்கல் கரும்பு விளைச்சல் ஜோர் கொடுமுடி விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 06,2012,05:50 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில், பொங்கலுக்கு அறுவடை செய்யப்படும் கரும்பு பயிர் விளைச்சல் ஜோராக உள்ளது.
ஈரோடு மாவட்டத்தில் கறுப்பு கரும்பு, ஆலைக்கரும்பு என இரு வகையாக, பயிர் செய்யப்படுகிறது. கறுப்பு கரும்பை சித்திரையில் நடவு செய்து, தைப்பொங்கலுக்கு முன்னதாக அறுவடை செய்வது வழக்கம்.கடந்த சித்திரை மாதத்தில், விதைக் கரும்பை விவசாயிகள் நடவு செய்தனர். கிணற்றுப் பாசனத்தில், குறைந்தளவு நீரிலும் கரும்பின் விளைச்சல் ஜோராக உள்ளதாக, விவசாயிகள் தெரிவித்தனர். இதுகுறித்து கொடுமுடி விவசாயிகள் கூறியதாவது:மாநிலம் முழுவதும் பருவமழை பொய்த்ததால், குறைந்தளவு தண்ணீரில், விளைச்சல் தரும் பயிர்களை விவசாயிகள் வளர்த்து வருகின்றனர்.குறைந்தளவு நீரிலும் கரும்பு விளைச்சல் அமோகமாக இருக்குமென்பதால், மாவட்டம் முழுவதும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள், கரும்பு சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.
சித்திரையில் விதைக் கரும்பு நடவு செய்யப்பட்டது. கரும்பு விளைச்சலுக்கு தேவையான வெப்பநிலை நிலவுவதால், கரும்பு விளைச்சல் ஜோராக உள்ளது. கறுப்பு கரும்பு முழு வளர்ச்சியடைய எட்டு மாதங்களாகும். சித்திரையில் நடவு செய்தால், தை மாதத்தில் அறுவடைக்கு ஏற்ப, கரும்பு முழு வளர்ச்சியை பெற்றிருக்கும். தற்போது, கரும்பின் வளர்ச்சி நன்றாக இருப்பதால், 2013ல் பொங்கலுக்குள், கறுப்பு கரும்பு அதிக விளைச்சலை கொடுக்கும்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**கீழ்பவானி பாசனத்துக்கு தண்ணீர் விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 06,2012,05:56 IST

ஈரோடு: "கீழ்பவானி பாசனத்தேவைக்கு உடனடியாக தண்ணீர் திறக்க வேண்டும்' என, கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கம் கோரியுள்ளது.
முதல்வர் ஜெயலலிதாவுக்கு, சங்க தலைவர் நல்லசாமி அனுப்பியுள்ள மனு: பவானி ஆற்றில்

இருந்து கீழ்பவானி, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் காலிங்கராயன் வாய்க்கால் பகுதிகள் பாசன வசதி பெறுகின்றன. இந்தாண்டு ஏப்ரல், 15ல், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கும், ஜூலை, 15ல் காலிங்கராயன் பாசனத்துக்கும் தண்ணீர் திறக்கப்பட்டது. கீழ்பவானி பாசனப்பரப்பு, இரண்டு லட்சத்து 7,000 ஏக்கர் கொண்டது. கீழ்பவானி பாசனத்துக்கு அட்டவணைப்படி ஆகஸ்ட், 15ல் தண்ணீர் திறந்திருக்க வேண்டும். பல்வேறு காரணங்களால் தண்ணீர் திறக்கப்படவில்லை. இப்பகுதியில் கடுமையான வறட்சி நிலவுகிறது. மழைப்பொழிவும் போதியளவு இல்லை. ஆங்காங்கே குடிநீர் பஞ்சம் வந்துள்ளது. தென்னை மரக்குருத்துகள் காய்ந்து சாயும் நிலை ஏற்பட்டு விட்டது. பவானிசாகர் அணையில், 43.94 அடி தண்ணீர் உள்ளது. இதன் கொள்ளளவு, 3.14 டி.எம்.சி., அணைக்கு நீர் வரத்து வினாடிக்கு 2,319 கன அடியாக உள்ளது. இன்றைய தேதியில் மின் அணைகளில் ஒன்பது டி.எம்.சி.,க்கும் மேலாக தண்ணீர் உள்ளது. கீழ்பவானி பாசனத்தேவைக்கு முன்னுரிமை கொடுத்து, மின் அணை தேக்க தண்ணீர் திறக்கப்பட வேண்டும் என, பொதுப்பணித்துறையின் அரசாணை எண்-329/1979 கூறுகிறது. இதையும் கணக்கில் எடுத்து, இன்று அணையில் இருக்கும் இருப்பையும், வரவிருக்கும் எதிர்பார்ப்பு வரத்தையும் வைத்து, இந்தாண்டு கீழ்பவானி பாசனத்துக்கு தண்ணீர் திறக்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## 100 நாள் வேலை திட்டத்தில் சிறு, குறு விவசாய நிலங்கள் மேம்படுத்த புதிய திட்டம்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 06,2012,07:00 IST

தஞ்சாவூர்: சிறு, குறு விவசாயிகள் மற்றும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் விவசாய நிலங்களை, 100 நாள் வேலை திட்டத்தில் மேம்படுத்தும் வகையில், அதன் பட்டியலை வரும் ஒன்பதாம் தேதி நடக்கும் சிறப்பு கிராம சபை கூட்டத்தில் வைக்குமாறு அலுவலர்களுக்கு, தஞ்சை கலெக்டர் பாஸ்கரன் அதிரடியாக உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: தமிழகத்திலுள்ள சிறு, குறு விவசாயிகள் மற்றும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் விவசாயிகளின் நிலங்களை மேம்பாடு செய்யும் பணிகளை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலையுறுதி திட்டத்தில் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி தஞ்சை மாவட்டத்தில் பஞ்சாயத்துகள் மற்றும் குக்கிராமங்கள் வாரியாக சிறு, குறு விவசாயிகள் மற்றும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் விவசாயிகளின் நிலம் குறித்த விபரங்கள், தொடர்புடைய வி.ஏ.ஓ.,க்கள் மற்றும் வேளாண் அலுவலர்கள் மூலம் சேகரிக்கப்பட்டு வருகிறது.

எனவே, சிறு, குறு விவசாயிகள் மற்றும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் விவசாயிகளின் நிலக்கைப்பற்று விபரம் அடங்கிய பட்டியலை அங்கீகாரம் செய்யும் வகையில், வரும் ஒன்பதாம் தேதி நடக்கும் சிறப்பு கிராம சபா கூட்டத்தில் வைக்குமாறு, அலுவலர்களுக்கு

உத்தரவிடப்பட்டுள்ளது. அதனால், அனைத்து பஞ்சாயத்துகளுக்கு உட்பட்ட சிறு, குறு விவசாயிகள் மற்றும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் விவசாயிகளும், 9ம் தேதி நடக்கும் சிறப்பு கிராம சபா கூட்டத்தில் பங்கேற்று பயன்பெற வேண்டுகிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**தோட்டக்கலை பண்ணை தொழிலாளர்களுக்கு கூலி உயர்வு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 06,2012,02:20 IST

திண்டுக்கல்:திண்டுக்கல் மாவட்டத்தில் அரசு தோட்டக்கலை பண்ணை மற்றும் பூங்காவில் பணிபுரியும் கூலியாட்களுக்கு ஊதியம் உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. ரெட்டியார்சத்திரம், சிறுமலை, கொடைக்கானல், தாண்டிக்குடி அரசு தோட்டக்கலை பண்ணைகள் மற்றும் கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில் தினக்கூலியாட்களாக பணிபுரிந்து வரும் ஆண், பெண்களுக்கு கூலி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. ககலெக்டர் வெங்கடாசலம் கூறியதாவது: கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக அரசு தோட்டக்கலை பண்ணை மற்றும் பிரையண்ட் பூங்காவில் 100 முதல் 150 ஆண், பெண் கூலியாட்கள் பணியாற்றி வருகின்றனர். ஆண்களுக்கு தினசரி கூலியாக ரூ.100ம், பெண்களுக்கு 85 ரூபாயு ம் வழங்கப்பட்டு வருகிறது. இதனை உயர்த்தி ஆண்களுக்கு 200 ரூபாயும்ம், பெண்களுக்கு 175 ரூபாயும் வழங்கப்படும், என்றார்.

**நறுமணப்பயிர்கள் பயிரிட15 ஹெக்டேர் இலக்கு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 06,2012,02:10 IST

கொடைக்கானல்:""கொடைக்கானலில் நடப்பு ஆண்டில் 15 ஹெக்டேர் பரப்பளவில் நறுமணப்பயிர்கள் பயிரிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது," என தோட்டக்கலை துணை இயக்குனர் ராஜா முகம்மது தெரிவித்தார்.அவர் கூறியதாவது: தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ், நறுமணப்பயிர்களான"ரோஸ்மேரி, அஸ்டமேரியா(கொய்மலர்கள்) உள்ளிட்டவை 15 ஹெக்டேரில் பயிரிட முடிவு செய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், மலர்செடிகளுக்கு 50 சதவீதம் வரை மானியம் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பீன்ஸ், காரட், பூண்டு, பழச்செடிகள், மண்புழு தயாரிப்பு, அவக்கோடா, பிளம்ஸ், காபி, ஆரஞ்சு நாற்றுகளும் மானியத்தில் வழங்கப்படும். பட்டா, சிட்டா , அடங்கள் உள்ள விவசாயிகள், வேளாண்மை உதவி அலுவலர், தோட்டக்கலை துணை இயக்குனர் அலுவலகத்தை தொடர்ப்பு கொண்டு பயன்பெறலாம், " என்றார்.

**மானிய விலையில் நெல், பயிறு விதை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 06,2012,01:33 IST

ஸ்ரீவில்லிபுத்தூர்:ஸ்ரீவில்லிபுத்தூரில் நெல், பயிறு விதைகள் மானிய விலையில் வழங்கப்படுவதாக, வேளாண் உதவி இயக்குனர் டாக்டர் ஆறுமுகம் கூறினார்.அவர் கூறியதாவது: புரட்டாசி பட்டத்திற்கான நெல் விதைகளான ஆடுதுறை 45, டீலக்ஸ் பொன்னி, ஆடுதுறை 39 ஆகியன, ஒரு கிலோ 21ரூபாய் 50காசு, அம்பை 16 ஒரு கிலோ 20 ரூபாய் 50 காசுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இந்த விதைகள் கிலோ 5 ரூபாய் மானியத்தில் வழங்கப்படுகிறது. தேசிய உணவு இயக்க திட்டத்தில் உளுந்து வம்பன்4 (ஆதாரவிதை) கிலோ 58 ரூபாய் 30 காசு, சான்று விதை 60 ரூபாய் , பாசி பயிறு கோ 912,கே 90, கே 851 ரகங்கள் கிலோ 58 ரூபாய் 70 காசுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதில் பயிறு வகைகள், கிலோ 12 ரூபாய் மானியத்தில் வழங்கப்படுகிறது, என்றார்.

தினமணி

கோழி வளர்ப்போர் பறவைக்காய்ச்சல் நோய் வராமல் தடுக்கும் வழிமுறைகள்

First Published : 05 Sep 2012 02:19:35 PM IST

பறவைக் காய்ச்சல் நோய் வராமல் தடுக்கும் வழிமுறைகள் குறித்து கோழி வளர்ப்போர் கவனத்தில் கொள்ள வேண்டும் என காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட கால்நடை நோய் புலனாய்வு பிரிவு தெரிவித்துள்ளது.

உலகின் பல்வேறு நாடுகளில் காணப்படும் பறவைக்காய்ச்சல் நோய் இந்தியாவிலும் பரவி உள்ளது. தமிழகத்தில் பறவைக்காய்ச்சல் நோய் பாதிப்பு இல்லை. எனினும் இந்நோய் கோழிகளையும், மனிதர்களையும் தாக்காமல் இருக்க கீழ்கண்ட சுகாதார வழிமுறைகளை கண்டிப்பாக கோழிவளர்ப்போர் பின்பற்ற வேண்டும்.

**வழிமுறைகள்:**

வீட்டில் வளர்க்கும் கோழிகள் வீட்டு எல்லையை விட்டு வெளியில் சென்று மேயாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதே போல் வெளியில் உள்ள கோழி, வாத்து, கொக்கு மற்றும் இதர வனப்பறவைகளை உங்கள் வீட்டு எல்லைக்குள் நுழைந்து கோழிகளின் அருகில் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். சுவர் அல்லது முள்வேலி அமைக்க வேண்டும்.

உங்கள் கோழிகளின் தீவனம், தண்ணீர் வேறு கோழிகள் அல்லது பறவைகள் பங்கிட்டுக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தீவனம், தண்ணீர் கொடுத்து விட்டு தட்டுக்களை வெளியே வைத்தல் கூடாது.

கோழி, வாத்து, வான்கோழி, கூஸ் வாத்து போன்ற பல்வேறு பறவைகளை ஒன்றாக வளர்த்தல் கூடாது.

வெளிநாட்டுப் பறவைகள் வந்து செல்லும் பறவைகள், சரணாலயங்களாக அருகில் கோழி அல்லது வாத்து கண்டிப்பாக வளர்க்கக்கூடாது. நாடு விட்டு நாடு செல்லும் பறவைகள் தான் பறவைக்காய்ச்சல் நோயை பரப்புகின்றன.

சந்தையில் வாங்காமல் அரசுப் பண்ணைகளில் இருந்து கோழிக்குஞ்சுகளை வாங்கலாம்.

கோழி எச்சம் உள்ள இடங்களில் சிறுவர்களை விளையாட விடக்கூடாது. கோழிக்கூண்டு சுத்தம் செய்யும்போது மூக்கின் மீது துமி கட்டி கொள்ளவும். கோழி அல்லது கோழி இறைச்சி கையாளும்போது கைகளை நன்கு சோப்பு போட்டு கழுவ வேண்டும்.

கோழிக்கறி, கோழிமுட்டை சாப்பிடுவோருக்கான அறிவுரைகள்:

முழுக்கோழியை அப்படியே சமைப்பது கூடாது. ஏனெனில் கோழி உடலின் அனைத்துப்பகுதிகளிலும் 70 டிகிரி வெப்பம் படாமல் போய்விடலாம். அரை வேக்காட்டில் சமைத்த கோழி, முட்டையை உண்ணக்கூடாது.

பச்சை முட்டை அல்லது ஆப்பாயில் சாப்பிடக்கூடாது. முழுமையாக அவித்த முட்டை அல்லது முழுமையாக பொரித்த ஆம்லெட் சாப்பிடலாம்.

கோழிகளில் பறவைக் காய்ச்சல் நோய் அறிகுறிகள்:

தீவனம் உண்ணாமல் சோர்வுடன் இருத்தல், தலைவீக்கம், கொண்டையில் நீலநிறம் பரவுதல், முட்டை உற்பத்தி திடீர் குறைவு, 100 சதம் வரை கோழிகள் திடீர் இறப்பு

இறந்த கோழிகளின் உடல் உறுப்புகள், நுரையீரல்களில் ரத்தக்கசிவு கொண்ட தொடை, கால்கள் மீது ரத்தப்புள்ளிகள்.

மேற்கண்ட அறிகுறிகள் இருந்தால் உடனே அருகே உள்ள கால்நடை மருத்துவமனையை அணுகலாம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சூரியகாந்தி புண்ணாக்கில் அக்ரா நச்சு அதிகரிக்க வாய்ப்பு: வானிலை ஆராய்ச்சி மையம் தகவல்

First Published : 05 Sep 2012 12:57:23 PM IST

நாமக்கல், செப்.4: மழையளவு குறைந்து காணப்படுவதால் சூரியகாந்தி புண்ணாக்கில் அக்ரா நச்சின் அளவு அதிகரிக்க வாய்ப்புள்ளதாக நாமக்கல் வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அம்மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள செய்தி:

நாமக்கல் மாவட்ட வானிலையில் வரும் 3 நாட்களுக்கு (செப்.5 முதல் செப்.7 வரை) பொதுவாக மேகமூட்டத்துடன் மழையின்றி காணப்படும். காற்றின் திசை வேகம் மணிக்கு 5 கிமீ முதல் 9 கிமீ வரை மேற்கிலிருந்து வீசக்கூடும். வெப்ப நிலை குறைந்தபட்சம் 23 டிகிரி செல்சியஸ் முதல் அதிகபட்சம் 34 டிகிரி செல்சியஸ் வரையும், காற்றில் ஈரப்பதம் குறைந்த பட்சம் 45 சதவீதம் முதல் அதிகபட்சம் 77 சதவீதம் வரையும் இருக்கும்.

கோழிப்பண்ணையாளர்களுக்கு..:

மழையளவு குறைந்து காணப்படுவதால் கோழிகளுக்குத் தேவையான நிலத்தடி நீரை பயன்படுத்துவதில் மிகுந்த எச்சரிக்கையுடன், விரயமற்ற அளவில் பயன்படுத்திட வேண்டும். சூரியகாந்தி புண்ணாக்கில் அக்ரா நச்சின் அளவை கண்காணிக்கவும், இந்த பூஞ்சை நச்சின் அளவு மிகுந்து காணப்படும் சூரியகாந்தி புண்ணாக்கை பயன்படுத்தும் அளவைக் குறைக்கவும் வேண்டும்.

வேளாண் விவசாயிகளுக்கு..:

பல்லாண்டு மரப்பயிர்களான தென்னை, மா, சப்போட்டா, கொய்யா, நெல்லி போன்றவற்றுக்கு அதிக அளவில் தண்ணீர் தேவைப்படுவதால் மரத்துக்கு 20 முதல் 40 லிட்டர் வரை தண்ணீரை வாரத்துக்கு இருமுறை அளித்து வரவேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாழையால் வாழும் இளைஞர்

First Published : 06 Sep 2012 12:00:00 AM IST



விருத்தாசலத்தை அடுத்த சின்னவடவாடி கிராமத்தில் ப.வேல்முருகனின் நிலத்தில் அறுவடைக்கு தயாராக உள்ள ஜி9 வாழைத்தார்கள்.

விருத்தாசலம்: விருத்தாசலம் பகுதியில் திசு வளர்ப்பு வாழையான கிராண்ட் நைன் ரக வாழையை சாகுபடி செய்து நல்ல லாபம் கிடைப்பதாக இளைஞர் ஒருவர் தெரிவிக்கிறார்.

விருத்தாசலம் பகுதியில் மணிலா, கரும்பு, நெல், வாழை போன்ற விவசாயப் பொருள்களை விவசாயிகள் பயிர் செய்து வருகின்றனர்.

தற்போது திசு வளர்ப்பு வாழைக்கன்றான ஜி9 வாழைப்பழம் பார்வைக்கு கவர்ச்சியாக இருப்பதால் அவற்றை பொதுமக்கள் விரும்பி வாங்கிச் செல்கின்றனர். தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து கடலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு கிராண்ட் நைன் எனப்படும் ஜி9 வாழை விற்பனைக்கு வருகிறது.

இதைப் பார்த்த விருத்தாசலத்தை அடுத்த சின்னவடவாடி கிராமத்தைச் சேர்ந்த ப.வேல்முருகன், தானும் இந்த வாழையை சாகுபடி செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் தனக்குச் சொந்தமான 2 ஏக்கர் நிலத்தில் ஜி9 வாழையை நடவு செய்துள்ளார். தற்போது அறுவடை செய்யும் நிலையில் உள்ளது.

இது குறித்து ப.வேல்முருகன் தெரிவித்தது: பொதுவாக திசு வளர்ப்பு வாழையை நடும்போது அந்தந்தப் பருவ சூழலுக்கு ஏற்ப நடவு செய்ய வேண்டும். இதனடிப்படையில் விருத்தாசலம் பகுதியில் ஜூன் முதல் டிசம்பர் மாதத்துக்குள் நடவு செய்ய வேண்டும்.

கன்றுகளை ஜனவரி முதல் மே மாதம் வரையிலான மாதங்களில் நடவு செய்தால் பாக்டீரியா மற்றும் வைரஸ் நோய்த் தாக்குதல் அதிகம் இருப்பதுடன் செடியின் வளர்ச்சியும் குறைந்து சில நேரங்களில் குலை தள்ளிவிடும் என தோட்டக்கலைத் துறையினர் தெரிவித்தனர். அதன்படி ஆகஸ்ட், செம்டம்பர் மாதங்களில் நான் நடவு செய்தேன்.

நிலத்தை சமப்படுத்தி தோட்டக்கலைத் துறையினரின் ஆலோசனைப்படி 6 அடி இடைவெளியில் 1 ஏக்கருக்கு 1000 கன்றுகளை நடவு செய்தேன். நடவு செய்தது முதல் 5 நாளுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சி வந்தேன். 1 ஏக்கருக்கு 10 டன் தொழு உரம் இட்டும், 30 நாளுக்கு ஒரு முறை களை எடுத்து வந்தேன். தற்போது அறுவடைக்குத் தயார் நிலையில் வாழைத்தார் உள்ளது.

விருத்தாசலம் பகுதியில் இந்த ஜி9 வாழைத்தார் ஒன்று ரூ.300 முதல் ரூ.600 வரையில் விற்பனையாகிறது. களை எடுத்தல், முட்டுக்குச்சிகள், தொழு உரம், உரம் உள்ளிட்டவைகளின் செலவு போக நல்ல லாபம் கிடைக்கும் வகையில் இருக்கிறது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் கடலூர் மாவட்டத்தில் ஏற்பட்ட தானே புயலின்போது 3 மாத கன்றுகளாக இருந்த வாழை மண்ணில் சாய்ந்து கிடந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தேன். இருப்பினும் சாய்ந்த கன்றுகளுக்கு மண் அணைத்ததால் அவை நன்றாக வளர்ந்துள்ளன. எனவே, நல்ல லாபம் தரக்கூடியதாகவும், விற்பனை செய்வதற்கு எளிமையாகவும் இருக்கிறது என்று தெரிவித்தார்.

இது குறித்து வேளாண்மைத் துறை உதவிப் பேராசிரியர் ஒருவர் தெரிவித்தது: வாழை பயிரிட விரும்புவோர் நல்ல வடிகால் வசதியுள்ள அமில காரத் தன்மை 5.5-7.5 வரையுள்ள மண்ணைத் தேர்வு செய்யலாம். காரத்தன்மை அதிகமாகவும் உப்பு கலந்த களிமண்ணானது வாழை நடவு செய்ய ஏற்றதல்ல. ஏனெனனில், இத்தகைய மண்ணில் நுண்ணூட்டச் சத்தும், மணிச்சத்தும் வாழைக்கு எளிதில் கிடைக்காது.

திசு வாழைக் கன்றுகளைத் தேர்வு செய்யும்போது 5 முதல் 6 இலைகள் கொண்ட நன்கு வளர்ந்த தரமான செடிகளைத் தேர்வு செய்ய வேண்டும்.

வாழைக் கன்றுகள் நடும் வயலை உளிக்கலப்பை மூலம் ஒரு முறையும், சட்டிக்கலப்பையின் மூலம் ஒரு முறையும் உழவு செய்த பின்னர் கொக்கிக் கலப்பையால் 2 முறை உழவு செய்ய வேண்டும். நடவுக்கு ஒரு மாதத்துக்கு முன்பே 1.5ஷ்1.5ஷ்1.5 அடி அளவுள்ள குழிகளை 6-க்கு 6 அடி அல்லது 5-க்கு 7 அடி இடைவெளியில் எடுக்க வேண்டும்.

குழிக்கு 5 கிலோ அளவுக்கு தொழு உரத்தை மேல் மண்ணுடன் கலந்து குழியில் இட வேண்டும். மேலும், வேப்பம் புண்ணாக்கு 500 கிராம், பியூரடான் 20 கிராம் இட்டு கன்றுகளை நடவு செய்ய வேண்டும். ஹெக்டர் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 3 ஆயிரம் வாழைக்கன்றுகள் தேவை. இவ்வாறு

நடவு செய்த வாழைக்கன்றுகளுக்கு நாள்தோறும் தேவையான அளவு தண்ணீர் பாய்ச்ச வேண்டும். வாழை ஒன்றுக்கு நாள்தோறும் 25 லிட்டர் தண்ணீர் தேவைப்படும். நீரில் எளிதில் கரையும் உரங்களை ஒரு வாழைக்கு 200 முதல் 300 கிராம் தழை, மணி மற்றும் சாம்பல் சத்து என்ற விதத்தில் கரையும் உரப்பாசனம் மூலம் 5 நாள் இடைவெளியில் இடவேண்டும்.

வாழைக் கன்றில் நூல்புழுத் தாக்குதலின் அறிகுறி தெரிந்தால் மீண்டும் வேப்பம் புண்ணாக்கு, புங்கம் புண்ணாக்கை ஒரு மரத்துக்கு 500 கிராம் வீதம் இட்டு மண் அணைக்க வேண்டும்.

அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா இரண்டையும் 20 கிராம் அளவில் தொழு உரத்துடன் கலந்து மரம் ஒன்றுக்கு இடவேண்டும். இவ்வாறு செய்தால் கன்றுக்கு ஊட்டச்சத்து சிறப்பாக அமையும். பாக்டீரியா நோய்த் தாக்குதலிலிருந்து கன்றுகளைக் காப்பாற்ற செடிக்கு 25 கிராம் சூடோமோனாஸ் வைக்கலாம்.

வாழைக்குலையின் கடைசி சீப்பு வந்தவுடன் 1 வாரத்துக்குள் ஆண் பூவை நீக்கிவிட்டு சவுக்கு அல்லது யூகலிப்டஸ் குச்சிகளை முட்டுக் கொடுக்க வேண்டும். கடைசி சீப்பு வெளிவந்தவுடன் ஒளி ஊடுருவும் பாலித்தீன் பை கொண்டு வாழைக்குலைகளை மூடவேண்டும். ÷பாலித்தீன் பைகளில் குளிர்காலமாக இருப்பின் 2 சதவீதம் துளைகளையும், கோடைகாலத்தில் 4 சதவீதத் துளைகளையும் ஏற்படுத்தி காற்றோட்டமாக வைத்திருக்க வேண்டும்.

இதன்மூலம் பழங்கள் நல்ல ஏற்றுமதித் தரத்துடன் சிறப்பாகக் காணப்படும். நன்கு பராமரிக்கப்பட்ட ஜி9 வாழை நடவு செய்த 11 மாதங்களில் முதல் அறுவடையும், முதல் அடிக்கன்றிலிருந்து வரும் குலைகள் 10 மாதத்திலும், 2-ம் அடிக்கன்றிலிருந்து வரும் குலை 9 மாதத்திலும் வரும் என தெரிவித்தார்.

## கரும்பு டன்னுக்கு ரூ.3500 வழங்கக் கோரி அரூரில் தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

First Published : 05 Sep 2012 12:35:08 PM IST

அரூர், செப். 4: கரும்பு டன்னுக்கு ரூ.3500 வழங்க வேண்டும் என வலியுறுத்தி தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தினர் செவ்வாய்க்கிழமை கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரூர் வட்டாட்சியர் அலுவலகம் எதிரே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு விவசாயிகள் சங்க நிர்வாகி சி.சிங்காரம் தலைமை வகித்தார்.

1966-ம் ஆண்டின் கரும்பு கட்டுப்பாடு சட்டத்தை மத்திய அரசு ரத்து செய்ய வேண்டும். கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் கடன்கள் ரூ.1400 கோடியை மத்திய அரசு தள்ளுபடி செய்ய வேண்டும். கரும்பு வெட்டும் தொழிலாளர்களின் கூலியை சர்க்கரை ஆலை நிர்வாகமே வழங்க வேண்டும்.

தனியார் சர்க்கரை ஆலைகளில் மொலாசாஸ் டன் ரூ.4 ஆயிரத்துக்கு விற்பனை செய்கின்றனர். ஆனால் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் மொலாசாஸ் ஒரு டன் ரூ.1400-க்கு குறைவான விலையில் விற்பனை செய்கின்றனர்.

எனவே கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகத்தில் நடைபெறும் ஊழல்களை கட்டுப்படுத்த தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டன.

ஆர்ப்பாட்டத்தில் எம்எல்ஏ பி.டில்லிபாபு, கரும்பு விவசாயிகள் சங்க மாநிலக்குழு உறுப்பினர் பி.குமார், மாவட்ட செயலாளர் கே.என்.மல்லையன், வட்ட செயலர் எஸ்.கே.கோவிந்தன், சங்க நிர்வாகிகள் இ.கே.முருகன், ஏ.நேரு, கே.செல்வம், தங்கராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

அதிக மகசூலுக்கு திருந்திய நெல் சாகுபடி சாதனை விவசாயி பெருமிதம் விவசாய களம்

பதிவு செய்த நேரம்:2012-08-28 12:03:25

தென்மேற்கு பருவ மழை பொய்த்துவிட்ட நிலையில் விவசாயிகள் வடகிழக்கு பருவ மழையை நம்பி உள்ளனர். இதன் மூலம் ஒரு போக சாகுடியாவது செய்ய வேண்டும். விவசாயிகள் குடும்பத்திற்காகவாவது உணவுக்கு தேவையான நெல் சாகுபடி செய்ய விவசாயிகள் முனைப்புடன் உள்ளனர். தற்போது ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. இந்த காலகட்டத்தில் திருந்திய நெல் சாகுபடி செய்து அதிக மகசூல் பெறுவது குறித்து குலமங்கலம் விவசாயி கிருஷ்ணன் கூறுகையில்: மக்கிய தொழு உரம்மிட்டு நிலத்தை தயார் செய்து வைத்திருக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 8 கிலோ விதையை ஊறவைத்து மண் பரப்பிய பிளாஸ்டிக் (ட்ரே)தட்டில் விதை பரப்பும் கருவி கொண்டு விதையை பரப்பி ட்ரேயை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி வைக்கவும். 36 மணி நேரத்திற்கு பின் சமப்படுத்திய நாற்றங்காலில் விதையை பரப்பி வைக்க வேண்டும். தேவைக்கு ஏற்ப தண்ணீர் பாய்ச்சி வரவேண்டும். 14ம் நாள் இளநாற்றை நடவு இயந்திரத்தின் மூலம் 25க்கு 25 செ.மீ இடைவெளி விட்டு நடவு செய்ய வேண்டும். நடவுக்கு பின் 10 நாள் கழித்து சோனோ வீடர்(எ) பவர் வீடர் மூலம் களைகளை அமுக்கி விடவேண்டும். இதேபோன்று 20, 30, 40 நாட்களில் களை எடுக்க வேண்டும்.

உரம் நீர் நிர்வாகம்: நடவுக்கு 17:17:17 காம்ப்ளக்ஸ் இரண்டு மூடை இட வேண்டும். 20 மற்றும் 35ம் நாட்களில் இலை வண்ண அட்டை பயன்படுத்தி யூரியா, பொட்டாஷ் உரங்களை தேவைக்கு ஏற்ப இட வேண்டும். நீர் மறைய நீர் கட்டி பயிருக்கு தண்ணீர் பாய்ச்சுவதால் நீரின் அளவு மொத்தத்தில் 40 சதவீதம் மிச்சமாகிறது.

பயன்கள்: களைகளை நிலத்திலே அமுக்குவதால் பயிருக்கு உரமாகிறது. பயிர்கள் இடைவெளியிருப்பதால் சூரிய ஒளி அனைத்து தூர்களுக்கும் கிடைக்கிறது. தூர்களின் எண்ணிக்கை 35ம் நாள் 30 சிம்புகளும், 50 நாள் 60 சிம்புகளும் கிடைத்தது. நல்ல இடைவெளி இருப்பதால் பூச்சி, பூஞ்சாணம் தாக்குதல் குறையும். உரச்செலவும் பதர் குறைந்து மகசூல் இரட்டிப்பாக கிடைத்தது. கூலி ஆட்கள் கிடைக்காத இத்தருணத்தில் திருந்திய நெல் சாகுபடி செய்வதால் நிம்மதி கிடைக்கிறது. கால விரையம் தவிர்க்கப்படுகிறது.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்: நான் கடந்த 3 ஆண்டுகளாக இயந்திரம் மூலம் திருந்திய நெல் சாகுபடி செய்து ஏக்கருக்கு சுமார் 4 ஆயிரம் கிலோ மகசூல் எடுத்துள்ளேன். இந்த சாகுபடியால் மாவட்ட அளவில் சிறந்த விவசாயிக்கான விருதை கலெக்டர் சகாயத்திடம் பெற்றுள்ளேன். தேசிய அளவில் மகேந்திரா சம்மிந்தி அக்ரி விருதுக்கான போட்டியில் கலந்து கொண்டு இந்தாண்டு பிப்.20ம் தேதி டெல்லியில் நடந்த விழாவில் மத்திய வேளாண்மை அமைச்சர் சரத்பவாரிடம் முதல் பரிசாக ரூ.2.11 லட்சமும், சான்றிதழும் பெற்றுள்ளோன். இது தமிழ் மண்ணுக்கு பெருமையாகும், என்றார்.

"பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ. 97 லட்சம் ஊக்கத் தொகை'

First Published : 05 Sep 2012 01:41:29 PM IST

கரூர், செப். 4: கரூர் மாவட்டத்தில் உள்ள 5885 பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ. 97 லட்சம் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது என்றார் மாவட்ட ஆட்சியர் வெ. ஷோபனா.

மாவட்ட ஆட்சியரகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் 12 பேருக்கு ஊக்கத் தொகைகளை வழங்கி அவர் பேசியது:

கரூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு நபார்டு வங்கி மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் 413 கறவை மாட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பால் உற்பத்தி தொழில்முனைவோர் திட்டத்தின் கீழ் 625 கறவை மாடுகள் கடன் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு பிற்பட்டோர் நல ஆணையம் மற்றும் சிறுபான்மையினர் நல ஆணையத்தின் மூலம் 15 சங்கங்களில் உள்ள உறுப்பினர்களுக்கு 150 கறவை மாடுகள் கடன் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பால் உற்பத்தியாளர்களின் நலனுக்காக உற்பத்தியாளர்கள் தாங்கள் வழங்கும் பாலிற்குரிய எடை மற்றும் விலை தெரிந்து கொள்ள 3 மையங்களுக்கு தானியங்கி பால் சேகர மையம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 8 மையங்களுக்கும் இந்த சேகர மையம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது கரூர் மாவட்டத்தில் நாளொன்றுக்கு 65,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

பால் உற்பத்தியாளர்கள் ஆவின் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் வழங்கி பயன்பெற வேண்டும் என்றார் ஆட்சியர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் தா. கிறிஸ்துராஜ், பால்வளத் துறை துணைப் பதிவாளர் இரா. முத்துக்கிருஷ்ணன், ஆவின் மேலாளர் பி. துரைராசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## கரும்பு நிலுவைத் தொகையை வழங்கக் கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

First Published : 05 Sep 2012 12:52:10 PM IST

மயிலாடுதுறை,செப்.4: மயிலாடுதுறை வட்டம், தலைஞாயிறு என்பிகே ஆர்ஆர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகம் விவசாயிகளுக்கு கொடுக்கவேண்டிய கரும்புக்கான நிலுவைத் தொகையை உடனடியாக வழங்கவேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தினர் செவ்வாய்கிழமை மயிலாடுதுறையில் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வட்டாட்சியர் அலுவலகம் எதிரே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு சங்கத்தின் மாநிலக்குழு உறுப்பினர் டி. காசிநாதன் தலைமை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் கரும்பு டன்னுக்கு ரூ.3500 வழங்க வேண்டும்.

சீர்திருத்தம் என்ற பெயரில் 1966-ம் ஆண்டு கரும்பு கட்டுப்பாட்டு சட்டத்தை ரத்து செய்வதை மத்திய அரசு கைவிடவேண்டும்.

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் விவசாய பிரதிநிதிகளை தேர்வு செய்வதற்கு தேர்தல் நடத்திட வேண்டும் என்பன உள்ளிட்ட 12 கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

கீழ்வேளூர் சட்டப்பேரவை உறுப்பினர் நாகை மாலி,சிஐடியு மாவட்டத் தலைவர் ஆர். ராமானுஜம், கரும்பு விவசாயிகள் சங்க நாகை மாவட்டச் செயலர் வி. சுப்பிரமணியன், அமைப்புச் செயலர் எஸ். துரைராஜ்,விவசாய சங்கத் தலைவர் என்.ஜி.மகாலிங்கம் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர். ஆர்ப்பாட்டத்தில் என்பிகேஆர்ஆர் கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள்,மயிலாடுதுறை மற்றும் மணல்மேடு பகுதி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## புதிய பயிர் ரகங்கள் குறித்தப் பயிற்சி

First Published : 05 Sep 2012 02:15:42 PM IST

புதுக்கோட்டை, செப். 4: புதுக்கோட்டை அருகே உள்ள வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் புதிய பயிர் ரகங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்த விவசாயிகளுக்கானப் பயிற்சி செப்.11-ல் அளிக்கப்படவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் வி.கலைஅரசி வெளியிட்ட செய்திக்குறிப்பு: பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டியுள்ளது. முதலாம் பசுமைப் புரட்சியால் உணவு தானிய உற்பத்தி பல மடங்கு பெருகியுள்ளது. இது உணவுத் தேவைக்குப் போக ஏற்றுமதி செய்யும் அளவை எட்டியுள்ளது. இந்த சாதனைக்கு தொடர் ஆராய்ச்சிகளின் மூலம் வெளியிடப்பட்ட உயர் விளைச்சல் ரகங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

தட்ப வெப்ப நிலை மற்றும் பூச்சி நோய் தாக்குதல்களை தாங்கி வளரக்கூடிய புதிய ரங்கள் மற்றம் நவீன தொழில்நுட்பங்களை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் தேசிய வேளாண் ஆராய்சிக் கழகம் விவசாயிகளுக்காக வெளியிட்டு வருகிறது.

இத்தகைய தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு விளக்கும் வகையில் வரும் செவ்வாய்க்கிழமை வம்பனில் ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

அனைத்து விவசாயிகளும் கலந்துகொள்ளலாம். தொடர்புக்கு: 04322 290321.

"புதுகை பகுதிக்கும் வேளாண் உதவிகளை வழங்க வேண்டும்'

First Published : 05 Sep 2012 02:15:25 PM IST

புதுக்கோட்டை, செப். 4: காவிரி டெல்டா மாவட்டங்களுக்கு தமிழக அரசு அறிவித்துள்ள வேளாண் சிறப்புத் திட்ட உதவிகளை புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள காவிரி பாசனப் பகுதிகளுக்கும் வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

புதுக்கோட்டையில் திங்கள்கிழமை நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் மாவட்ட விவசாயப் பிரிவு ஆலோசனைக் கூட்டத்தில்; காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு ரூ.53 கோடியில் பல்வேறு மானியத் திட்டங்களை அறிவித்துள்ள தமிழக அரசு, புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி, கறம்பக்குடி பகுதிகளைச் சேர்ந்த காவிரி பாசனப் பகுதி விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும்.

இந்தக் கோரிக்கையை நிறைவேறாவிட்டால் அப்பகுதி விவசாயிகளை ஒன்று திரட்டி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்.

புதுக்கோட்டை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்டத் தலைவர் ஏ. ஆசாத் தலைமை வகித்தார். இணை அமைப்பாளர் விவேகானந்தன், மீனவர் பிரிவு துணை அமைப்பாளர் கபீர்முகமது, மாவட்டத் துணைத் தலைவர் சுப. தூண்டி, காங்கிரஸ் தொழிற்சங்கத் தலைவர் சுப. கண்ணன், திருவரங்குளம் வட்டத் தலைவர் சேந்தைசண்முகம், புதுகைத் தொகுதி விவசாயப்பிரிவுத் தலைவர் முகமதுமீரான் உள்ளிட்டோர் பேசினர்.

## சூரியகாந்தி புண்ணாக்கில் அக்ரா நச்சு அதிகரிக்க வாய்ப்பு: வானிலை ஆராய்ச்சி மையம் தகவல்

First Published : 05 Sep 2012 12:57:11 PM IST

சூரியகாந்தி புண்ணாக்கில் அக்ரா நச்சு அதிகரிக்க வாய்ப்பு: வானிலை ஆராய்ச்சி மையம் தகவல்

நாமக்கல், செப்.4: மழையளவு குறைந்து காணப்படுவதால் சூரியகாந்தி புண்ணாக்கில் அக்ரா நச்சின் அளவு அதிகரிக்க வாய்ப்புள்ளதாக நாமக்கல் வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அம்மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள செய்தி:

நாமக்கல் மாவட்ட வானிலையில் வரும் 3 நாட்களுக்கு (செப்.5 முதல் செப்.7 வரை) பொதுவாக மேகமூட்டத்துடன் மழையின்றி காணப்படும். காற்றின் திசை வேகம் மணிக்கு 5 கிமீ முதல் 9 கிமீ வரை மேற்கிலிருந்து வீசக்கூடும். வெப்ப நிலை குறைந்தபட்சம் 23 டிகிரி செல்சியஸ் முதல் அதிகபட்சம் 34 டிகிரி செல்சியஸ் வரையும், காற்றில் ஈரப்பதம் குறைந்த பட்சம் 45 சதவீதம் முதல் அதிகபட்சம் 77 சதவீதம் வரையும் இருக்கும்.

கோழிப்பண்ணையாளர்களுக்கு..:

மழையளவு குறைந்து காணப்படுவதால் கோழிகளுக்குத் தேவையான நிலத்தடி நீரை பயன்படுத்துவதில் மிகுந்த எச்சரிக்கையுடன், விரயமற்ற அளவில் பயன்படுத்திட வேண்டும். சூரியகாந்தி புண்ணாக்கில் அக்ரா நச்சின் அளவை கண்காணிக்கவும், இந்த பூஞ்சை நச்சின் அளவு மிகுந்து காணப்படும் சூரியகாந்தி புண்ணாக்கை பயன்படுத்தும் அளவைக் குறைக்கவும் வேண்டும்.

வேளாண் விவசாயிகளுக்கு..:

பல்லாண்டு மரப்பயிர்களான தென்னை, மா, சப்போட்டா, கொய்யா, நெல்லி போன்றவற்றுக்கு அதிக அளவில் தண்ணீர் தேவைப்படுவதால் மரத்துக்கு 20 முதல் 40 லிட்டர் வரை தண்ணீரை வாரத்துக்கு இருமுறை அளித்து வரவேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அனுமதியின்றி இயங்கும் கிரஷரால் விவசாயம் பாதிப்பு: விவசாயிகள் புகார்

First Published : 05 Sep 2012 12:56:27 PM IST

நாமக்கல், செப்.4: மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் முறையான அனுமதி பெறாமலும், பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யாமலும் இயங்கும் கிரஷர் மற்றும் குவாரியால் விவசாய நிலங்களும், கால்நடைகளும் பெருமளவில் பாதிக்கப்பட்டு வருவதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் மாவட்ட புவியியல் மற்றும் சுரங்கத்துறை அலுவலர் புகார் தெரிவித்தனர்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அருகே ஆர்.புதுப்பட்டி கிராமத்தில் 50க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. இப்பகுதியில் அமைந்து ள்ள தனியார் கல்குவாரியிலிருந்து அதிகப்படியான வெடிமருந்துகள் பயன்படுத்தி பாறைகளை வெட்டியெடுப்பதுடன், கிரஷரில் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யாமல் ஜல்லிகள் உடைப்பதால் அதிலிருந்து வெளியேறும் மணல் கலந்த

துகள்கள் அருகே விவசாய நிலங்களில் பயிரப்பட்டுள்ள பயிர்களின் மீது படிந்து விளைச்சலையும், கால்நடைகளுக்கும் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தி வருவதாக அந்த கிராம மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இப்பாதிப்புகளை அடுத்து ஆர்.புதுப்பட்டியைச் சேர்ந்த ராஜூ, தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் கேட்ட கேள்விக்கு, சம்பந்தப்பட்ட பகுதியில் கிரஷர் இயக்குவதற்கான விண்ணப்பங்கள் முழுமையாக ஆய்வு செய்யப்படவில்லை என்றும், கட்டுமான பணிகள் முழுமையாக முடிக்காததால் இதுவரை அங்கு கிரஷர் இயக்க அனுமதி வழங்கப்படவில்லை என்றும் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் பதிலளித்துள்ளது.

அதனடிப்படையில், மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் முறையான அனுமதிகள் பெறாமலேயே அங்கு கிரஷர் இயக்கப்பட்டு விவசாயத்து க்கும், கால்நடைகளுக்கும் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் ராஜூ தெரிவித்தார். இதுகுறி த்து அவர் மேலும் கூறுகையில், பாதிப்புகள் குறித்து சம்பந்தப்பட்ட குவாரி, கிரஷர் உரிமையாளரிடம் தெரிவித்தபோது கோடிக்கணக் கில் முதலீடு செய்திருப்பதால் தொழிலை கைவிட முடியாது என்றும், பாதிப்பு அதிகம் இருந்தால் விவசாய நிலங்களை தானே வாங்கிக் கொள்வதாகவும் விளை நிலங்களை ஆக்கிரமிக்க முயற்சிக்கப்படுகிறது என்றார் அவர்.

இப்பாதிப்புகள் குறித்து ஆர்.புதுப்பட்டி கிராம மக்கள் ஆட்சியரகத்தில் பலமுறை முறையிட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில் லை எனக் கூறப்படுகிறது. இதையடுத்து, பாதிக்கப்பட்ட அந்த கிராம விவசாயிகள் பலர் நாமக்கல் மாவட்ட புவியியல் மற்றும் சுரங்கத்துறை அலுவலர் ரமேஷிடம் மனு அளித்தனர். அப்போது, உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யாமலும், மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் முறையான அனுமதி பெறாமலும் இயங்கும் கிரஷர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தவிர, குவாரியில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகளவில் வெடி மருந்துகள் பயன்படுத்துவதை தடுத்து விவசாயத்துக்கும், கால்நடை வளர்ப்புத் தொழிலுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

கோரிக்கையை ஏற்ற மாவட்ட சுரங்கத்துறை அலுவலர், சம்பந்தப்பட்ட கல்குவாரி மற்றும் கிரஷரை கோட்டாட்சியருடன் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## முட்டை விலை

First Published : 05 Sep 2012 12:55:48 PM IST

நாமக்கல், செப்.4:

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.3.40, சென்னையில் ரூ.3.45.

கறிக்கோழி

பல்லடம் பிராய்லர் ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.62, முட்டைக் கோழி கிலோ ரூ.45.

## சர்க்கரை ஆலைகளின் நஷ்டத்தை விசாரிக்க நிபுணர் குழு தேவை: கரும்பு விவசாயிகள் கோரிக்கை

First Published : 05 Sep 2012 12:54:22 PM IST

நாமக்கல், செப்.4: கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் ரூ.1800 கோடி நஷ்டத்தை விசாரிக்க நிபுணர் குழு அமைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கை களை வலியுறுத்தி தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தினர் பள்ளிப்பாளையத்தில் செவ்வாய்க்கிழமை ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். பொன்னிசர்க்கரை ஆலை முன்பு நடந்த இந்த ஆர்ப்பாட்டத்துக்கு சங்கத் தலைவர் எ.முத்துசாமி தலைமை தாங்கினார். துணை தலைவர்கள் எம்.செங்கோட்டையன், எஸ்.லிங்கப்பகவுண்டர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு கள் இயக்க மாநில அமைப்பாளர் செ.நல்லசாமி, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலர் பி.பெருமாள், கரும்பு விவசாயிகள் சங்க மாநில துணை தலைவர் செ.நல்லாக்கவுண்டர் மற்றும் தமிழக விவசாயிகள் சங்க தலைவர் ராமசாமிகவுண்டர் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

தமிழக அரசு முத்தரப்பு கூட்டத்தை கூட்டி 2012-13ஆம் ஆண்டுக்கு கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3500 விலை நிர்ணயிக்க வேண்டும், கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் ஏற்பட்டுள்ள ரூ.1800 கோடி நஷ்டம் குறித்து நிபுணர் குழு விசாரிக்க வேண்டும். கூட்டுறவு ஆலைகளுக்கு கொடுத்த கடனை அரசு தள்ளுபடி செய்ய வேண்டும். சர்க்கரை ஆலைகளின் விவகார எல்லைகளை தீர்மானிக்கும் குழுவில் விவசாயிகளின் பிரதிநிதிகள் இடம்பெறச் செய்ய வேண்டும்.

கூட்டுறவு ஆலைகளின் அரவைத் திறனை 3500 டன்னாக உயர்த்திட வேண்டும். எத்தனால் உற்பத்தியை விரைந்து அமுல்படுத்த வேண்டும். தனியார் ஆலைகளில் எடை மோசடி மற்றும் ரெக்கவரி மோசடிகளை தடுத்திட வேண்டும். கரும்பு வெட்டுக்கூலியை ஆலை நிர்வாகமே ஏற்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. கரும்பு விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.

## உளுந்து சாகுபடி வயல்களில் ஆய்வு

First Published : 05 Sep 2012 11:37:46 AM IST

செய்யாறு, செப். 4: செய்யாறு வட்டாரத்தில் திருந்திய முறையில் உளுந்து, பயறு சாகுபடி செய்துள்ள வயல்களில் வேளாண் உதவி

இயக்குநர் ஏ.எம்.சாந்தி செவ்வாய்க்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

பயறு (பருப்பு) உற்பத்தி வகை பயிர்களின் பரப்பளவை அதிகரிக்க, திருந்திய பயறு சாகுபடி முறையை கடைபிடிக்குமாறு விவசாயிகளுக்கு வேளாண்மை துறை அறிவுறுத்தி வருகிறது.

இந்நிலையில் செய்யாறு வட்டாரத்தில் வாழ்குடை, கழனிப்பாக்கம், முக்கூர், பாராசூர் போன்ற கிராமங்களில் இம் முறையில் சாகுபடி செய்யப்படும் உளுந்து, பயறு வயல்களில் வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி ஆய்வு செய்து விவசாயிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

மேலும் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் மூலம் டி.ஏ.பி. உரம் ஹெக்டருக்கு 25 கிலோவுக்கு, ரூ.250 மானியமாக வழங்கப்படுகிறது.

மானிய விலை உரத்தை பெற விவசாயிகள், தங்கள் பகுதியில் உள்ள உதவி வேளாண்மை அலுவலரை தொடர்புகொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

## பருத்தி கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும்: ஒன்றியக் குழுக் கூட்டத்தில் வலியுறுத்தல்

First Published : 05 Sep 2012 12:38:36 PM IST

லால்குடி, செப். 4: புள்ளம்பாடியில் அரசு சார்பில் பருத்தி கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என ஊராட்சி ஒன்றியக் குழுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்தக் கூட்டத்துக்கு ஒன்றியக் குழுத் தலைவர் கல்லகம் நடராசன் தலைமை வகித்தார். வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டாரம்) அம்புரோஸ், துணைத் தலைவர் செல்விபாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் உறுப்பினர்களின் விவாதம்:

சேவியர் : கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட கோவண்டாகுறிச்சி - வடுகர்பேட்டை இடையிலான தார்ச்சாலையை புதுப்பிக்க வேண்டும்.

ஆணையர்: விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

கமலா: புதூர்பாளையம் அங்கன்வாடி மையத்தில் சமையல் அறை இல்லாததால், தெருவிலேயே குழந்தைகளுக்கு சமையல் செய்கின்றனர். அப்போது, மற்ற உறுப்பினர்களும் பல்வேறு இடங்களில் இதேநிலை நிலவுவதாக தெரிவித்தனர்.

ஆணையர்: அரசு மற்றும் அரசு உதவிப் பெறும் பள்ளிகளில் சமையல் கூடங்கள் அமைக்க மாவட்ட நிர்வாகத்துக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

அம்மாசி: புள்ளம்பாடி மற்றும் அதைச் சுற்றியுள்ள 20-க்கும் மேற்பட்ட ஊராட்சிப் பகுதிகளில் பருத்தி விவசாயம் நடைபெற்று வருகிறது. விளையும் பருத்தியை மணப்பாறை, பெரம்பலூர் பகுதிகளுக்கு சென்றுதான் விற்பனை செய்ய வேண்டியுள்ளது. எனவே, இந்தப் பகுதியில் பருத்தி கொள்முதல் நிலையம் அமைக்க இந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

தலைவர்: அனைவரும் ஒருமித்து தெரிவித்தால், விரைவில் இதுகுறித்து தீர்மானம் நிறைவேற்றலாம். ஒன்றியக் குழு உறுப்பினர்களின் பகுதிகளில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள தலா ரூ. 3 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

## மேட்டூர் அணையின் நீர்வரத்து 6 ஆயிரம் கன அடியாக அதிகரிப்பு

First Published : 06 Sep 2012 12:00:00 AM IST

சேலம், செப். 5: மேட்டூர் அணைக்கு புதன்கிழமை நீர்வரத்து அதிகரித்துள்ளது.

மேட்டூர் அணையில் இருந்து ஆண்டுதோறும் ஜூன் 12-ம் தேதி பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும். பருவமழை பொய்த்துவிட்ட நிலையில், செப்டம்பர் 17-ம் தேதி சம்பா சாகுபடிக்காக தண்ணீர் திறக்கப்படும் என்று தமிழக முதல்வர் அண்மையில் அறிவித்தார்.

கடந்த மாதத்தில் கர்நாடக நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் பலத்த மழை பெய்ததால் காவிரியில் வெள்ளம் பெருக்கெடுத்தது. இதனால், அந்த மாநிலத்தில் உள்ள கபினி அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. இதையடுத்து அணையின் பாதுகாப்பு கருதி வினாடிக்கு சுமார் 16 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது.

இதனால், பல மாதங்களாக 500 கன அடிக்கும் குறைவாகவே நீர்வரத்து இருந்து வந்த மேட்டூர் அணைக்கு வினாடிக்கு 9 ஆயிரம் கன அடி வரையிலும் நீர்வரத்து அதிகரித்தது. இதற்கிடையே பருவமழை குறைந்ததால் கர்நாடக அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படுவது நிறுத்தப்பட்டது. மேட்டூருக்கான நீர்வரத்து மீண்டும் பழைய நிலைக்குச் சென்றது.

மேலும், அணையில் இருந்து கரையோர, காவிரி டெல்டா மாவட்டங்களின் குடிநீர்த் தேவைக்காக வினாடிக்கு 2 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்படுவதால் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து குறைந்து வருகிறது. செப்டம்பர் 1-ம் தேதி அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 2,830 கன அடியாக இருந்தது. செவ்வாய்க்கிழமை (செப்டம்பர் 4) மாலை 4,493 கன அடியாக அதிகரித்தது. புதன்கிழமை காலை வினாடிக்கு 5,400 கன அடியாக இருந்த நீர்வரத்து மாலை 4 மணி நிலவரப்படி 6,196 கன அடியாக அதிகரித்தது.

இதனால், கடந்த 1-ம் தேதி 76.64 அடியாக இருந்த நீர்மட்டம் 5-ம் தேதி மாலை 4 மணி நிலவரப்படி 77.29 அடியாக உயர்ந்துள்ளது. கர்நாடகத்தின் கபினி அணையில் இருந்து வினாடிக்கு 5 ஆயிரம் கன அடி வீதமும், கே.ஆர்.எஸ். அணையில் இருந்து 1,400 கன அடி வீதமும் தண்ணீர் காவிரியில் திறக்கப்படுகிறது.

மேலும், காவிரி நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் சில நாள்களாக மழை பெய்து வருகிறது. இதுவே மேட்டூருக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதற்கு காரணம் என்று பொதுப் பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இயற்கை விவசாயம்: அரசு ஊக்குவிக்குமா?

First Published : 06 Sep 2012 01:30:26 AM IST



கடலூர், செப். 5: வேளாண் பயன்பாடுகளுக்கு இயற்கை உரங்களைப் பயன்படுத்தி விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதற்காக பயிர்கள் செழித்து வளரவும், பூச்சி, புழுக்களில் இருந்து அவற்றைப் பாதுகாக்கவும் ரசாயன உரம், பூச்சிக் கொல்லி மருந்துகளைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்துக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக ரசாயன உரங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். உர விலை ஏற்றத்தால் எதிர்கால விவசாயம் கேள்விக்குறியாகும் நிலை உருவாகியுள்ளது. இது குறித்து கடலூர் மாவட்ட உழவர் மன்றங்களின் கூட்டமைப்புத் தலைவர் பெ.ரவீந்திரன் கூறியது:

கடலூர் மாவட்டத்தில் சுமார் 77 ஆயிரம் ஏக்கர் கரும்பும், காவிரி டெல்டா உள்ளிட்ட பகுதியில் சுமார் 3 லட்சம் ஏக்கர் பரப்பளவில் 3 பருவ நெல் சாகுபடியும் நடக்கிறது. ஏக்கர் சாகுபடியில் என்:பி:கே என்ற கணக்கில் கரும்புக்கு ரூ.3,750-ம், நெல்லுக்கு ரூ.2,520-ம் மதிப்பில் ரசாயன உரங்களை விவசாயிகள் பயன்படுத்துகின்றனர். இந்த வகையில் கடலூர் மாவட்ட விவசாயிகள் ஆண்டுக்கு சுமார் ரூ.90 கோடியை ரசாயன உரத்திற்கே செலவிடுகின்றனர்.

கடலூர் மாவட்ட விவசாயிகளுக்கு ஆண்டுக்கு யூரியா 60 ஆயிரம் டன், டை அம்மோனியம் பாஸ்பேட் (டி.ஏ.பி.) 25 ஆயிரம் டன், பொட்டாஷ் 21 ஆயிரம் டன், கலப்பு உரங்கள் 42 ஆயிரம் டன், உயிர் உரங்கள் உள்ளிட்ட வேதிப்பொருட்கள் 100 டன் தேவைப்படுகிறது.

31.3.2010 வரையில் அனைத்து உரங்களின் விலையும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருந்தது. 1.4.2010 முதல் புதிய உரக்கொள்கை அறிவிக்கப்பட்ட பிறகு யூரியாவின் விலை மட்டுமே மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் எனவும், ஏனைய உரங்கள் அனைத்தும் உற்பத்தி செலவுக்கு

ஏற்ப அந்தந்த நிறுவனங்களே விலையை நிர்ணயம் செய்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது. இதனால் உர விலை கட்டுக்கடங்காமல் உள்ளதால் எதிர்கால விவசாயம் கேள்விக்குறியாகி உள்ளது.

உர உற்பத்திக்குத் தேவையான நாப்தா, பாஸ்போரிக் ஆசிட் ஆகிய மூலப்பொருட்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இவற்றுடன் இந்தியாவில் வெட்டி எடுக்கப்படும் டாலமை எனும் நீரில் கரையும் கனிமப் பொருட்களை விகிதாசார அடிப்படையில் கலந்து யூரியா, டி.ஏ.பி., எம்.ஓ.பி. சூப்பர் உள்ளிட்ட 12 வகையான காம்ப்ளக்ஸ் உரங்கள் தயாரிக்கப்படுகின்றன.

தேசிய அளவில் தேவைப்படும் உரத்துக்கு மத்திய அரசு ஆண்டு ஒன்றுக்கு கோடிக்கணக்கான ரூபாயை மானியமாகச் செலவிடுகிறது. முன்பு இத்தொகை உரம் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு நேரடியாக வழங்கப்பட்டது.

31.3.2010 வரை ஒரு மூட்டை யூரியா ரூ.251, டி.ஏ.பி., ரூ.486, எம்.ஓ.பி. ரூ.231, சூப்பர் ரூ.210-ம் விற்பனை செய்யப்பட்டது. குறைந்தபட்சம் ரூ.305 முதல் ரூ.425-க்குள் 12 வகையான கலப்பு உரங்கள் விவசாயிகளுக்கு கட்டுப்படியாகும் விலையில் கிடைத்தது.

புதிய உரக்கொள்கையால் 1.4.2010 முதல் யூரியா மூட்டை ரூ.283-என நிர்ணயிக்கப்பட்டது. உற்பத்தி செய்யும் நிறுவனங்களால் டி.ஏ.பி. விலை ரூ.880-920, எம்.ஓ.பி. ரூ.465, சூப்பர் ரூ.240 என உயர்த்தப்பட்டது. 12 வகையான காம்ப்ளக்ஸ் உரங்கள் அனைத்தும் சராசரியாக ரூ.750 என விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

இந்நிலையில், விவசாயிகளை மேலும் கசக்கிப் பிழியும் வகையில் நடப்பாண்டில் யூரியா ரூ.330, டி.ஏ.பி. ரூ.1100-1300 வரையிலும், எம்.ஓ.பி ரூ.600, சூப்பர் ரூ.350,-450 வரையிலும், 12 வகையான கலப்பு உரங்கள் ரூ.800-900-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

முன்பு நெல் சாகுபடி செலவு ரூ.14 ஆயிரம் முதல் ரூ.16 ஆயிரம் வரையில் இருந்தது. புதிய உரக்கொள்கைக்கு பின் தற்போது ரூ.20 ஆயிரத்தை எட்டும் நிலை உள்ளது. சாகுபடி செலவுக்கேற்ப குறைந்தபட்ச ஆதார விலையை அனைத்து வேளாண் விளைபொருள்களுக்கும் நிர்ணயிக்க மத்திய அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

100 நாள் திட்டத்தால் நிலவும் விவசாயத் தொழிலாளர் பற்றாக்குறை, இயற்கை பேரிடர் பாதிப்புகள், தட்பவெப்ப நிலை, தாமதமான மழை பொழிவு, நதிநீர் பிரச்னையால் நீர் கிடைக்காத நிலை போன்றவற்றால் அல்லல்படும் விவசாயிகளுக்கு உர விலையேற்றம் கடுமையான கூடுதல் சுமையை ஏற்படுத்தி உள்ளது.

வரும் காலங்களில் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் பொருட்டு ரசாயன உரங்களால் மட்டுமே மகசூல் எடுக்க முடியும் என்ற மனநிலையை மாற்றி இயற்கை உரங்களைப் பயன்படுத்தி புதிய தொழில் நுட்பங்களை கொண்டு கூடுதல் மகசூல் பெறலாம் என இயற்கை

வேளாண்மையின் மூலம் சாகுபடி செய்ய புதிய திட்டம் உருவாக்க வேண்டியது மத்திய, மாநில அரசுகளின் கடமையாகும்என்றார்.

வாழையால் வாழும் இளைஞர்

First Published : 06 Sep 2012 12:00:00 AM IST



விருத்தாசலத்தை அடுத்த சின்னவடவாடி கிராமத்தில் ப.வேல்முருகனின் நிலத்தில் அறுவடைக்கு தயாராக உள்ள ஜி9 வாழைத்தார்கள்.

விருத்தாசலம்: விருத்தாசலம் பகுதியில் திசு வளர்ப்பு வாழையான கிராண்ட் நைன் ரக வாழையை சாகுபடி செய்து நல்ல லாபம் கிடைப்பதாக இளைஞர் ஒருவர் தெரிவிக்கிறார்.

விருத்தாசலம் பகுதியில் மணிலா, கரும்பு, நெல், வாழை போன்ற விவசாயப் பொருள்களை விவசாயிகள் பயிர் செய்து வருகின்றனர்.

தற்போது திசு வளர்ப்பு வாழைக்கன்றான ஜி9 வாழைப்பழம் பார்வைக்கு கவர்ச்சியாக இருப்பதால் அவற்றை பொதுமக்கள் விரும்பி வாங்கிச் செல்கின்றனர். தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து கடலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு கிராண்ட் நைன் எனப்படும் ஜி9 வாழை விற்பனைக்கு வருகிறது.

இதைப் பார்த்த விருத்தாசலத்தை அடுத்த சின்னவடவாடி கிராமத்தைச் சேர்ந்த ப.வேல்முருகன், தானும் இந்த வாழையை சாகுபடி செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் தனக்குச் சொந்தமான 2 ஏக்கர் நிலத்தில் ஜி9 வாழையை நடவு செய்துள்ளார். தற்போது அறுவடை செய்யும் நிலையில் உள்ளது.

இது குறித்து ப.வேல்முருகன் தெரிவித்தது: பொதுவாக திசு வளர்ப்பு வாழையை நடும்போது அந்தந்தப் பருவ சூழலுக்கு ஏற்ப நடவு செய்ய வேண்டும். இதனடிப்படையில் விருத்தாசலம் பகுதியில் ஜூன் முதல் டிசம்பர் மாதத்துக்குள் நடவு செய்ய வேண்டும்.

கன்றுகளை ஜனவரி முதல் மே மாதம் வரையிலான மாதங்களில் நடவு செய்தால் பாக்டீரியா மற்றும் வைரஸ் நோய்த் தாக்குதல் அதிகம் இருப்பதுடன் செடியின் வளர்ச்சியும் குறைந்து சில நேரங்களில் குலை தள்ளிவிடும் என தோட்டக்கலைத் துறையினர் தெரிவித்தனர். அதன்படி ஆகஸ்ட், செம்டம்பர் மாதங்களில் நான் நடவு செய்தேன்.

நிலத்தை சமப்படுத்தி தோட்டக்கலைத் துறையினரின் ஆலோசனைப்படி 6 அடி இடைவெளியில் 1 ஏக்கருக்கு 1000 கன்றுகளை நடவு செய்தேன். நடவு செய்தது முதல் 5 நாளுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சி வந்தேன். 1 ஏக்கருக்கு 10 டன் தொழு உரம் இட்டும், 30 நாளுக்கு ஒரு முறை களை எடுத்து வந்தேன். தற்போது அறுவடைக்குத் தயார் நிலையில் வாழைத்தார் உள்ளது.

விருத்தாசலம் பகுதியில் இந்த ஜி9 வாழைத்தார் ஒன்று ரூ.300 முதல் ரூ.600 வரையில் விற்பனையாகிறது. களை எடுத்தல், முட்டுக்குச்சிகள், தொழு உரம், உரம் உள்ளிட்டவைகளின் செலவு போக நல்ல லாபம் கிடைக்கும் வகையில் இருக்கிறது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் கடலூர் மாவட்டத்தில் ஏற்பட்ட தானே புயலின்போது 3 மாத கன்றுகளாக இருந்த வாழை மண்ணில் சாய்ந்து கிடந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தேன். இருப்பினும் சாய்ந்த கன்றுகளுக்கு மண் அணைத்ததால் அவை நன்றாக வளர்ந்துள்ளன. எனவே, நல்ல லாபம் தரக்கூடியதாகவும், விற்பனை செய்வதற்கு எளிமையாகவும் இருக்கிறது என்று தெரிவித்தார்.

இது குறித்து வேளாண்மைத் துறை உதவிப் பேராசிரியர் ஒருவர் தெரிவித்தது: வாழை பயிரிட விரும்புவோர் நல்ல வடிகால் வசதியுள்ள அமில காரத் தன்மை 5.5-7.5 வரையுள்ள மண்ணைத் தேர்வு செய்யலாம். காரத்தன்மை அதிகமாகவும் உப்பு கலந்த களிமண்ணானது வாழை நடவு செய்ய ஏற்றதல்ல. ஏனெனனில், இத்தகைய மண்ணில் நுண்ணூட்டச் சத்தும், மணிச்சத்தும் வாழைக்கு எளிதில் கிடைக்காது.

திசு வாழைக் கன்றுகளைத் தேர்வு செய்யும்போது 5 முதல் 6 இலைகள் கொண்ட நன்கு வளர்ந்த தரமான செடிகளைத் தேர்வு செய்ய வேண்டும்.

வாழைக் கன்றுகள் நடும் வயலை உளிக்கலப்பை மூலம் ஒரு முறையும், சட்டிக்கலப்பையின் மூலம் ஒரு முறையும் உழவு செய்த பின்னர் கொக்கிக் கலப்பையால் 2 முறை உழவு செய்ய வேண்டும். நடவுக்கு ஒரு மாதத்துக்கு முன்பே 1.5ஷ்1.5ஷ்1.5 அடி அளவுள்ள குழிகளை 6-க்கு 6 அடி அல்லது 5-க்கு 7 அடி இடைவெளியில் எடுக்க வேண்டும்.

குழிக்கு 5 கிலோ அளவுக்கு தொழு உரத்தை மேல் மண்ணுடன் கலந்து குழியில் இட வேண்டும். மேலும், வேப்பம் புண்ணாக்கு 500 கிராம், பியூரடான் 20 கிராம் இட்டு கன்றுகளை நடவு செய்ய வேண்டும். ஹெக்டர் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 3 ஆயிரம் வாழைக்கன்றுகள் தேவை. இவ்வாறு

நடவு செய்த வாழைக்கன்றுகளுக்கு நாள்தோறும் தேவையான அளவு தண்ணீர் பாய்ச்ச வேண்டும். வாழை ஒன்றுக்கு நாள்தோறும் 25 லிட்டர் தண்ணீர் தேவைப்படும். நீரில் எளிதில் கரையும் உரங்களை ஒரு வாழைக்கு 200 முதல் 300 கிராம் தழை, மணி மற்றும் சாம்பல் சத்து என்ற விதத்தில் கரையும் உரப்பாசனம் மூலம் 5 நாள் இடைவெளியில் இடவேண்டும்.

வாழைக் கன்றில் நூல்புழுத் தாக்குதலின் அறிகுறி தெரிந்தால் மீண்டும் வேப்பம் புண்ணாக்கு, புங்கம் புண்ணாக்கை ஒரு மரத்துக்கு 500 கிராம் வீதம் இட்டு மண் அணைக்க வேண்டும்.

அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா இரண்டையும் 20 கிராம் அளவில் தொழு உரத்துடன் கலந்து மரம் ஒன்றுக்கு இடவேண்டும். இவ்வாறு செய்தால் கன்றுக்கு ஊட்டச்சத்து சிறப்பாக அமையும். பாக்டீரியா நோய்த் தாக்குதலிலிருந்து கன்றுகளைக் காப்பாற்ற செடிக்கு 25 கிராம் சூடோமோனாஸ் வைக்கலாம்.

வாழைக்குலையின் கடைசி சீப்பு வந்தவுடன் 1 வாரத்துக்குள் ஆண் பூவை நீக்கிவிட்டு சவுக்கு அல்லது யூகலிப்டஸ் குச்சிகளை முட்டுக் கொடுக்க வேண்டும். கடைசி சீப்பு வெளிவந்தவுடன் ஒளி ஊடுருவும் பாலித்தீன் பை கொண்டு வாழைக்குலைகளை மூடவேண்டும். ÷பாலித்தீன் பைகளில் குளிர்காலமாக இருப்பின் 2 சதவீதம் துளைகளையும், கோடைகாலத்தில் 4 சதவீதத் துளைகளையும் ஏற்படுத்தி காற்றோட்டமாக வைத்திருக்க வேண்டும்.

இதன்மூலம் பழங்கள் நல்ல ஏற்றுமதித் தரத்துடன் சிறப்பாகக் காணப்படும். நன்கு பராமரிக்கப்பட்ட ஜி9 வாழை நடவு செய்த 11 மாதங்களில் முதல் அறுவடையும், முதல் அடிக்கன்றிலிருந்து வரும் குலைகள் 10 மாதத்திலும், 2-ம் அடிக்கன்றிலிருந்து வரும் குலை 9 மாதத்திலும் வரும் என தெரிவித்தார்.

தினகரன்

## திருந்திய நெல் சாகுபடி முறையில் 25 ஆயிரம் ஹெக்டேரில் சாகுபடி செய்ய இலக்கு

பதிவு செய்த நேரம்:2012-09-05 11:59:30

காரைக்குடி: சிவகங் கை மாவட்டத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையில் 25 ஆயிரம் ஹெக்டேர் சாகு படி செய்ய இலக்கு நிர்ண யம் செய்யப்பட்டுள்ளது என மாவட்ட கலெக்டர் ராஜா ராமன் தெரிவித்துள்ளார்.

காரைக்குடி அருகே கல்லல் ஒன்றியத்துக்கு உட் பட்ட பேயன்பட்டியில் திருந்திய நெல்சாகுபடி திட்டத்தின் கீழ் இயந்திரத்தின் மூலம் நடவு செய் யும் பணி களை மாவட்ட கலெக்டர் ராஜராமன் ஆய்வு செய்தார். ஆய்வுக்கு பின் அவர் கூறியதாவது: சிவகங்கை மாவட்டத்தில் 1.2 லட்சம் ஹெக்டேர் பரப்பளவு நிலங்கள் விவசாயத்திற்காக பயன்படுத்தப்படுகின்றன. இம்மாவட்டத்தில் ஆற்றுப்பாச னம் மிகக்குறைவு. வருடாந்தர சராசரி மழையளவு 892 மி.மீ. இதில் 60 சதவீதம் வடகிழக்கு பருவமழை காலங்களில் பெய்கிறது. கண்மாய்களே பாசனத்திற்காக பயன்படுத்தப்படுகின்றன.

மாவட்டத்தில் நெல், நிலக்கடலை, எள், சிறுதா னிய பயிர்கள், பயறு வகை கள், பருத்தி, மிளகாய் மற் றும் கரும்பு ஆகியவை முக்கியமாக பயிரிடப்படுகின் றன. திருப்பத்தூர், சிங்கம்புணரி, திருப்புவனம் ஆகிய பகுதிகளில் அதிக அளவில் விவசாயம் செய்யப்படுகி றது. மாவட்டத்தில் திருந் திய நெல்சாகுபடி திட்டத் தின் கீழ் இந்த ஆண்டு 25 ஆயிரம் ஹெக்டேரில் சாகு படி செய்ய இலக்கு நிர்ண யம் செய்யப்பட்டுள்ளது. இதுவரை 460 ஹெக்டேரில் இந்த முறையை பயன்படுத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

சாதாரண முறையை விட இத்திட்டத்தின் மூலம் 30 சதவீதம் கூடுதலாக மக சூல் கிடைக்கும். முறையாக பராமரிக்கப்படுவதால் களை வர வாய்ப்பு இல்லை. மிக குறைவான ஆட்கள் போதுமானது. தவிர தொ குப்பு முறையில் விவசாயம் செய்ய விவசாயிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். ஆய்வின் போது வேளாண் இணை இயக்குநர் செல்லத்துரை, துணை இயக்குநர் காத்தபெருமாள், உதவி இயக்குநர் கணேசன், வேளாண் அலுவலர் காயத் திரி, உதவி அலுவலர் சுலோ ச்சனா, சிவராஜ் உள்பட பலர் உடன் இருந்தனர்.

## திசு வாழை சாகுபடியில் அதிக லாபம் பெற வேளாண் துறை யோசனை

பதிவு செய்த நேரம்:2012-09-05 11:59:17

சிவகங்கை, : திசு வாழை சாகுபடி மூலம் அதிக லாபம் பெற வேளா ண்மை துறை யோசனை தெரிவித்துள்ளது.

இது குறித்து வேளாண்மை துறை அதிகாரிகள் கூறியதாவது: இந்தியாவிலே தமிழ்நாட்டில் தான் அதிக பரப்பளவில் வாழை பயிரிடப்படுகின்றது என்றாலும், உற்பத்தித் திறன் ஏக்கருக்கு 15 முதல் 20 டன் என்ற அளவில் குறைவாகத்தான் உள்ளது. திசு வளர்ப்பு என்ற புதிய தொழில் நுட்பத்தின் மூலம் தயாரான கன்றுகளை பயிர் செய்து, திறம்பட சாகுபடி செய்தால் ஏக்கருக்கு 40 முதல் 45 டன் வரை மகசூல் பெறலாம்.

குள்ளவாழை, ரொபஸ் டா, பூவன், செவ்வாழை மற்றும் கிராண்ட்னைன் போன்ற ரகங்கள் நன்கு பயன் தரக்கூடிய திசு வாழை ரகங்களாகும். பொதுவாக வாழை பயிரிட பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை சிறந்த பட்டமாகும். ஆனால் திசு வளர்ப்பு வாழைக்கன்றுகளை வருடம் முழுவதும் பயிர் செய்யலாம். விற்பனை வாய்ப்பு மற்றும் காற்றின் பாதிப்பை பொறுத்து ஆராய்ந்து நடவு செய்ய வேண்டும். இது ஒரு வெப்ப மண்டலப் பயிராக இருப்பதால், 20 டிகிரி செல்சியஸ் முதல் 40 டிகிரி செல்சியஸ் வரை உள்ள வெப்பப் பகுதிகளில் சிறப்பாக வளரும். திசு வாழை சாகுபடிக்கும் இயல்பான வாழை சாகுபடிக்கும் நிலம் தயார் செய்தல் மற்றும் நடவு முறைகளில் அதிக வித்தியாசம் ஏதும் இல்லை.

இயல்பான வாழை சாகுபடிக்கு 3, 5 மற்றும் 7 மாதங்களில் மேலுரம் இடுவது வழக்கம். ஆனால் திசு வளர்ப்பு வாழைக்கு நட்டதிலிருந்து 45, 90, 125, 180வது நாட்களில் மற்றும் பூ வந்த பின் 6 முறை பிரித்து இட வேண்டும். திசு வாழை கன்றுகள் நடவு செய்த 10 அல்லது 12 மாதங்களில் அறுவடைக்கு வரும். பூ வந்து சரியாக 100 நாட் களில் தார்களை அறுவடை செய்யலாம். திசு வாழை கன்றுகள் அனைத்தும் ஒரே சீராக பூ விட்டு, சீராக முதிர்ந்து ஒரே நேரத்தில் அறுவடைக்கு வரும். இதனால் அறுவடை, போக்குவரத்து, விற்பனை ஆகிய பணிகளை எளிதாகவும், விரைவாகவும் முடிக்கலாம்.திசு வாழை யை சொட்டு நீர் பாசனத்துடன் அமைத்து சாகுபடி செய்தால் மட்டுமே கூடுதல் லாபம் பெற முடியும்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## மக்காச்சோளம் விவசாயிகளுக்கு வேளாண்.துறையினர் யோசனை

பதிவு செய்த நேரம்:2012-09-05 11:54:10

திண்டுக்கல், : மக்காச்சோள பயிரில் பாதிப்பு ஏற்பட்டவுடன் ரசாயன மருந்து தெளிக்காமல், நன்மை செய்யும் பூச்சிகள் மூலம் அவற்றை கட்டுப்படுத்தலாம் என, வேளாண்.துறையினர் தெரிவித்தனர்.

வாகரை மக்காச்சோள ஆராய்ச்சி நிலையத்தில் வத்தலக்குண்டு வேளாண்மைத்துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வயல்வெளிப்பள்ளி எனும் பயிற்சி அளிக்கப்பட்டது. உதவிப் பேராசிரியர் ரவிகேசவன் தலைமை வகிக்க, வத்தலக்குண்டு வேளாண்மை உதவி இயக்குநர் கோபால்ராஜ் முன்னிலை வகித்தார்.

விதை முதல் அறுவடை வரை பயிர் பாதுகாப்பு, மக்காச்சோள ரகங்களில் வளர்ச்சி பருவத்தின்போது பூச்சி நோய்கள் பற்றிய விபரம், இயற்கை முறையில் பயிர்பாதுகாப்பு, அதிக செலவில்லாமல் கூடுதல் மகசூல், குறைந்த செலவில் பயிர் பராமரிப்பு உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப விளக்கம் அளிக்கப்பட்டது.

மக்காச்சோள சாகுபடியின் போது பல்வேறு கட்டங்களில் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், தொழில்நுட்ப சந்தேகங்கள் குறித்தும் விஞ்ஞானிகளுடன் விவசாயிகள் கலந்துரையாடி பல்வேறுவிபரங்களை தெரிந்து கொண் டனர். குறிப்பாக பூச்சி, நோய்கள் குறித்து முழுமை யாக தெரிந்து கொண்டு எவ்வாறு இந்த பாதிப்பு ஏற்படுகிறது.

பூச்சிகளின் வாழ்க்கை முறை, நன்மை செய்யும் பூச்சிகள் எது என்பது உள்ளிட்டவற்றை தெரிந்து கொள்ள வேண்டும். பயிர்பாதுகாப்பு ஏற்பட்ட உடனே பூச்சிமருந்துகளை தெளிக்காமல், நன்மை செய்யும் பூச்சிகளை இனங்கண்டு அவற்றை பாதுகாத்து வளர்ப்பதின் மூலம் ரசா யன கலப்பில்லாமல் பாதிப்பு ஏற்படுத்தும் பூச்சி களை கட்டுப்படுத்தலாம் என வேளாண்.துறையினர் விளக்கம் அளித்தனர்.

## நிலக்கடலை சாகுபடியில் சாதனை தர்மபுரி பெண்ணுக்கு பரிசு

பதிவு செய்த நேரம்:2012-09-05 10:02:50

தர்மபுரி, : தர்மபுரியில் நிலக்கடலை சாகுபடியில் சாதனை படைத்த பெண்ணுக்கு, மாவட்ட வருவாய் அலுவலர் பரிசு வழங்கிப் பாராட்டினார்.

தர்மபுரி மாவட்ட வேளாண்மைத்துறை சார்பில், விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையில் அவர்களுக்கு பயிர் மகசூல் போட்டிகள் நடத்தப்படுகிறது. அதில் பல்வேறு பயிர்களை சாகுபடி செய்து அதிக அளவில் மகசூல் பெறும் விவசாயிகளை பாராட்டி ஊக்கப்பரிசு வழங்கப்பட்டு வருகிறது. இப்போட்டியில், மொரப்பூர் வட்டாரத்தைச் சேர்ந்த முனியம்மாள் என்பவர்

பங்கேற்றார். அவர் மானாவரி பயிராக நிலக்கடலை பயிரிட்டு, ஒரு ஹெக்டேருக்கு 3810 கிலோ மகசூல் பெற்றார். அதையடுத்து அவரை ஊக்குவிக்கும் விதமாக, முதல் பரிசாக ரூ.15 ஆயிரத்திற்கான காசோலையை மாவட்ட வருவாய் அலுவலர் ராமர் வழங்கிப் பாராட்டினார். இந்நிகழ்ச்சியின்போது, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் மனோகரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) ராஜசேகரன், ஆதிதிராவிடர் நல அலுவலர் கிரிஜாதேவி, துணை ஆட்சியர்(பயிற்சி)சிவப்பிரியா ஆகியோர் உடனிருந்தனர்.

## கரும்பு டன்னுக்கு ரூ 3500 விலைகோரி அரூரில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

பதிவு செய்த நேரம்:2012-09-05 10:01:53

அரூர், : அரூரில் தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தினர், ஒரு டன் கரும்புக்கு ரூ3500 விலை கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அரூர் வட்டாட்சியர் அலுவலகம் முன் நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு, கோபாலபுரம் சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை தலைவர் சிங்காரம் தலைமை வகித்தார். ஒரு டன் கரும்புக்கு ரூ3500 விலை வழங்க வேண்டும்; கூட்டுறவு சர்க்கரை ஆலை கடன் ரூ1400 கோடியை, மாநில அரசு தள்ளுபடி செய்ய வேண்டும்; ஆலை அரவை திறனை மேம்படுத்தி, நாள் ஒன்றுக்கு 5000 டன் கரும்பை அரவை செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநிலக்குழு உறுப்பினர் டில்லிபாபு எம்எல்ஏ, குமார், மாவட்ட செயலர் மல்லையன், வட்ட செயலர் கோவிந்தன், நேரு, செல்வம், தங்கராஜி, மனோகரன், சுப்ரமணியம், வெங்கடேசன், அண்ணாதுரை, கருப்பன், அங்கமுத்து, செல்வம், தமிழ்செல்வன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## சிறுதானிய உற்பத்தியை அதிகரிக்க சிறப்பு திட்டம்

பதிவு செய்த நேரம்:2012-09-05 10:01:28

அரூர், : தர்மபுரி மாவட்ட விதைச் சான்று உதவி இயக்குநர் வெங்கடேசன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தர்மபுரி மாவட்டத்தில் தற்போது பரவலாக மழை பெய்துவருகிறது. இதை பயன்படுத்தி, விவசாயிகள், சிறு தானிய பயிர்களான ராகி, சாமை சாகுபடி செய்து வருகின்றனர். இந்த பருவத்தில் ராகியில் ஜிபியு 28 மற்றும் கோ 14 ரகங்களையும், சாமையில் கோ 4 ரகத்தையும் சாகுபடி செய்யலாம். அடியுரமாக ஊட்டமேற்றிய தொழு உரம் இடம் வேண்டும். சிறுதானிய பயிர்களில் உற்பத்தியை அதிகரிக்க, இன்சிப் திட்டத்தில் விவசாயிகளுக்கு செயல் விளக்கத்திடல் அமைப்பதற்கு மான்யம் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் இத்திட்டத்தில் பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையத்தில், விவசாயிகளுக்கு 5 நாள் பயிற்சி வழங்கப்படுகிறது. விதைப் பண்ணை அமைத்து, தரமான விதைகள் உற்பத்தி செய்து வழங்கும் விவசாயிகளுக்கு கொள்முதல் விலையுடன், உற்பத்தி மானியமாக கிலோ ஒன்றுக்கு ரூ7.50 கூடுதலாக வழங்க வேளாண்மை துறையில் திட்டம் உள்ளது. எனவே தர்மபுரி மாவட்ட விவசாயிகள் வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி, உதவி விதை அலுவலர்களை தொடர்பு கொண்டு பயன்பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## வறட்சி மாவட்டமாக அறிவிக்க கோரி திருவாரூரில் 14 இடங்களில் திமுகவினர் ஆர்ப்பாட்டம்

பதிவு செய்த நேரம்:2012-09-05 10:24:45

திருவாரூர், : டெல்டா வை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வலியுறுத்தி, திமுக சார்பில், திருவாரூர் மாவட்டத்தில் 14 இடங்களில் நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது. திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரியில் ஊரா ட்சி ஒன்றிய அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் பாலச்சந்திரன் தலைமை வகித்தார். மாவ ட்ட செயலாளர் பூண்டி கலைவாணன் முன்னிலை வகித்து பேசுகையில், விவசாயிகளுக்காக அறிவித்துள்ள மானியங்கள் முழு மையாக விவசாயிகளை சென்று சேராது. விவசாயிகளை வஞ்சிக்கும் அரசாக அதிமுக அரசு செயல்படுகிறது என்றார். திருவாரூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் சுப்ரமணியன் தலைமை வகித்தார். முன்னாள் அமைச்சர் மதிவாணன் முன்னிலை வகித்தார். திருவாரூர் நகராட்சி அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு நகர செயலாளர் சங்கர் தலைமை வகித்தார். இதில் நகர்மன்ற துணைத்தலைவர் செந்தில், செயற்குழு உறுப்பினர் தியாகபாரி, நகர்மன்ற உறுப்பினர் அசோகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். குடவாசலில் ஒன்றிய செயலாளர் ஜோதிராமன், நன்னிலத்தில் ஒன்றிய செயலாளர் வரத.கோ.ஆனந்த், வலங்கைமானில் ஒன்றிய செயலாளர் அன்பரசு, முத்துப்பேட்டையில் ஒன்றிய செயலாளர் சிவசாமி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் அன்பரசு, நகராட்சி அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு நகர செயலாளர் பாண்டியன், கோட்டூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு ஒன்றிய செயலாளர் பால.ஞானவேல் ஆகியோர் தலைமை வகித்தனர். மன்னார்குடி நகராட்சி முன் நகர செயலாளர் ராஜ.பூபாலன், ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் ஒன்றிய செயலாளர் தலையாமங்கலம் பாலு, கூத்தாநல்லூர் நகராட்சி அலுவலகம் முன் நகர செயலாளர் ரகுநாதன் ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. டெல்டாவை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடந்தது.

கோட்டூரில் நாகை எம்பி ஏ.கே.எஸ்.விஜயன், மன்னார்குடியில் எம்எல்ஏ டி.ஆர்.பி ராஜா ஆகியோர் பங்கேற்றனர். ஆர்ப்பாட்டத்தில் திமுகவினர் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

## விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்

பதிவு செய்த நேரம்:2012-09-05 12:19:02

மதுராந்தகம், : மதுராந்தகம் அடுத்த படாளம் கூட்ரோடு பகுதியில் கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பாக அரசு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை பாதுகாப்பது, கரும்பு விவசாயிகளுக்கு இலவசமாக விதை, கரும்பு வழங்க வழியுறுத்துதல் உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடந்தது.
விவசாயிகள் சங்க நிர்வாகி பொன்னுசாமி தலைமை தாங்கினார். சங்க நிர்வாகிகள் பாஸ்கர், நேரு, மதுராந்தகம் ஒன்றிய கவுன்சிலர் ராஜா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் நிர்வாகி மோகனன், வாசுதேவன் சிறப்புரையாற்றினர். ஆர்ப்பாட்டத்திற்கு படாளம், ஈசூர், சாலவாக்கம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான கரும்பு விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## வேளாண்மை தொழில்நுட்ப பணிமனை கூட்டம்

பதிவு செய்த நேரம்:2012-09-05 11:48:39

அருப்புக்கோட்டை, : கோவிலாங்குளம் வேளா ண்மை அறிவியல் நிலையத்தில் மாவட்ட வேளாண் துறை அலுவலர்களுக்கான தொழில்நுட்ப பணிமனை கூட்டம் நடந்தது. வேளாண்மை இணை இயக்குநர் முருகதாஸ் தலை மை வகித்தார். துணை இயக்குநர் வன்னியராஜன் முன்னிலை வகித்தார். மாநில திட்ட துணை இயக்குநர் கனகராஜன், வேளாண்மை காப்பீட்டு திட்ட அலுவலர் லெட்சும ணன் பேசினர். 11 ஒன்றியங் களை சேர்ந்த வேளாண்மை அலுவலர்கள் கலந்துகொண்டனர். இதில் விவசாயிகளின் குறைகள், வேளாண் தொழில்நுட்ப குறைபாடு, மழையளவு அடிப்படையில் விளைவிக்கப்படும் பயிர்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. உதவி கோட்ட வேளாண்மை அலுவலர்கள் ஆறுமுகம், மணிசேகரன், பேராசிரியர் சோலையப்பன் கலந்து கொண்டனர்.

## கடும் வறட்சியால் நெற்பயிர்கள் கருகின

பதிவு செய்த நேரம்:2012-09-05 11:06:19

காட்டுமன்னார்கோவில், : கடும் வறட்சியால் நெற் பயிர்கள் கருகியது. காட்டுமன்னார்கோவில் அருகே ராஜசூடாமணியில் நேரடி நெல் விதைப்பில் விதைத்து முளைத்த நெற்பயிர்கள் கடுமையான வறட்சியால் கருகின. இப்பகுதியில் உள்ள விவசாயிகள் ஆண்டு தோறும் வடக்கு இராஜன் வாய்க்கால், வடவாறு, வீராணம் ஏரி ஆகியவற்றின் மூலம் பாசனம்

பெற்று விவசாயம் செய்து வந்தனர். இந்த ஆண்டு மேட்டூர் அணை திறக்கப்படாததாலும், பருவ மழை பொய்த்ததலும், விவசாயம் செய்ய முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர். காலம் தவறியாவது மழை பெய்யும் என்ற எண்ணத்தில் சில விவசாயிகள் நேரடி நெல் விதைப்பில் ஈடுபட்டனர். விரைவில் மழை பெய்யும் முளைத்து வரும் நெற்பயிர்கள் வளர்ந்து மகசூல் தரும் என்று நினைத்திருந்தனர். தொடர்ந்து வறட்சி நிலவுவதால் நேரடி நெல் விதைக்கப்பட்ட வயல்களில் முளைத்த நெற்பயிர்கள் கருகின. இதனால் விவசாயிகள் பெருத்த ஏமாற்றம் அடைந்தனர்.

சேமிப்பு கிடங்கில் இடமில்லாமல்

ரயிலிலேயே இருந்த அரிசி 6 நாளுக்கு பின் இறக்கம்



*01:53:12*

Thursday

2012-09-06

மயிலாடுதுறை : மத்திய தொகுப்பில் இருந்து மாதந்தோறும் தமிழகத்திற்கு அரிசி வழங்கப்படுகிறது. இதன்படி, சரக்கு ரயிலில் 3,319 டன் அரிசி, ஹைதராபாத்தில் இருந்து ஆகஸ்ட் 29ம் தேதி இரவு மயிலாடுதுறை ரயில் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டது. இந்த அரிசி மூட்டைகள் செம்பனார்கோவில் அடுத்த திருச்சம்பள்ளியில் உள்ள இந்திய உணவுக்கழக சேமிப்பு கிடங்கில் வைக்கப்படவேண்டும். 7,500 டன் கொள்ளளவு கொண்ட இந்த கிடங்கில் ஏற்கனவே 10,644 டன் அரிசி இருப்பு உள்ளது. இதனால், ரயிலில் வந்த அரிசி மூட்டைகளை எங்கு வைப்பது என பிரச்னை ஏற்பட்டது. இதையடுத்து, திருச்சம்பள்ளி கிடங்கில் இருந்த அரிசியில் ஒரு பகுதியை காரைக்கால் மற்றும் சிதம்பரத்தில் உள்ள கிடங்குகளுக்கு மாற்றும் பணி கடந்த 1ம் தேதி முதல் நடந்தது.

இதைத் தொடர்ந்து, மயிலாடுதுறையில் சரக்கு ரயிலில் இருந்த 3,319 டன் அரிசி மூட்டைகள், 6

நாட்களுக்கு பின் நேற்று இறக்கப்பட்டது. இதற்கிடையே, ரயிலில் இருந்து 6 நாட்களாக அரிசி இறக்கப்படாததற்காக அபராத வாடகையை ரயில்வே நிர்வாகம் வசூலித்தது. கோதுமை தேக்கம்: பஞ்சாபில் இருந்து குமரி மாவட்டத்துக்கு 3120 டன் கோதுமை கடந்த 2 நாள்களுக்கு முன், சரக்கு ரயிலில் கொண்டு வரப்பட்டது. இதை பள்ளி விளை கிடங்குக்கு கொண்டு செல்ல வேண்டும். அங்கு இடமில்லாததால், கோட்டாறில் ரயிலிலேயே 3வது நாளாக மூட்டைகள் காத்திருக்கின்றன. இதை எங்கு கொண்டு செல்வது என அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர்.